பக்கங்கள்: பன்னிரண்டு

யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 29 ஞாயிற்றுக்கிழமை (13-08-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:191

## அரசமைப்புச் சீர்திருத்தம்
# மகா சங்கத்தினரின் திருத்தங்களையும் அரசு பரிசீலிக்கும்!

## அவர்களிடம் புதிய பிரதமர் நேரில் உறுதி தெரிவிப்பு

கொழும்பு,ஓகஸ்ட்13

**அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகளில் பாதகமாக உள்ள அம்சங்கள் என்று பௌத்த மகா சங்கத்தினர் தெரிவிக்கும் விடயங்கள் குறித்து அவர்களுடன் அரசு பேச்சு நடத்தும். இது தொடர்பாக அவர்கள் சமர்ப்பிக்கும் திருத்தங்களையும் அரசு பரிசீலனை செய்யும்.**

**புதிய பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா இவ்வாறு மகா சங்கத்தினரைச் சந்தித்து அவர்களிடம் உறுதி கூறியுள்ளார்.**

புதிய பிரதமராகப் பதவியேற்ற ரத்னசிறி விக்கிரமநாயக்கா நேற்று கண்டிக்குச் சென்று பௌத்த மகா சங்கத்தின் முக்கிய உறுப்பினர்களையும், மல்வத்தை, அஸ்கிரிய பீடாதிபதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார். அப்போதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

"உத்தேச அரசமைப்புக் குறித்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்து பத்திரிகையாளர்கள் வருகை

யாழ்ப்பாணம்,ஓக.13

தாய்லாந்து நாட்டுப் பத்திரிகையாளர் மூவர் நேற்று யாழ்.நகருக்கு விஜயம் செய்து அரச உயர் அதிகாரிகள் மற்றும் பொது மக்களைச் சந்தித்து குடாநாட்டு நிலைவரங்களைக் கேட்டறிந்து கொண்டனர்.

தாய்லாந்தில் வெளியாகும் 'டை வெல்ற்' (Die Welt) பத்திரிகையைச் சேர்ந்த டானியல் கென்ஸ்ரன்கோல், 'பாங்கொக் ஸ்போட்ஸ்' பத்திரிகையைச் சேர்ந்த அனுசா சரோன்போ ஆகியோருடன் 'ஜெனரல் நியூஸ் றிப்போர்ட்டை'ச் சேர்ந்த பத்திரிகையாளர் ஒருவருமே நேற்று யாழ். விஜயம் செய்தனர்.

இராணுவத்தினரின் பாதுகாப்புடன் வந்த இவர்கள் யாழ்.செயலகத்துக்குச் சென்று அரச அதிபர் க.சண்முகநாதனைச் சந்தித்தனர்.

யாழ். நகரப் பகுதிக்கு விஜயம் செய்த இவர்கள் பொதுமக்கள் சிலருடன் உரையாடினர்.

(ஐ-5-9)

## வவுனியாவில் சடலம்

வவுனியா,ஓக.13

வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் நேற்று வெட்டுக்காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் கிடக்கக் காணப்பட்டது.

இந்தச் சடலம் பின்னர் அடையாளம் காண்பதற்காக வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

(ஐ-5-164)

## ஜனாதிபதியை தேர்தல ஆணையர் சந்திப்பு

கொழும்பு,ஓக.13

நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் தொடர்பான ஏற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா ஜனாதிபதியைச் சந்தித்து ஒரு மணி நேரம் பேச்சு நடத்தியுள்ளார்.

கடந்த புதன்கிழமை அலரி மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

எந்த நேரத்திலும் பொதுத் தேர்தலை நடத்த தேர்தல் திணைக்களம் தயாராகவுள்ளதாக தேர்தல்ஆணையாளர் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

(ஐ-7)

## 22 வயோதிபர்கள் வன்னியில்

வவுனியா,ஓக.13

தென்மராட்சிப் பகுதியில் நிலவிய அசாதாரண சூழ்நிலையை அடுத்து கைதடி முதியோர் இல்லத்தில் இருந்து வெளியேறிய 22 வயோதிபர்கள் வன்னியில் வன்னேரிக்குளம் முதியோர் இல்லத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்த இந்த முதியவர்களுக்கான வசதிகள் யாவும் அங்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## தேரர்களுக்கு 'சிங்கள உறுமய' நன்றி தெரிவிப்பு

கொழும்பு,ஓக.13

உத்தேச புதிய அரசமைப்பு சட்டமாவதைத் தடுக்கஅனைத்து பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களும் அளித்த ஆதரவுக்கு 'சிங்கள உறுமய' அமைப்பின் தலைவர் எஸ்.எல். குணசேகர நன்றி தெரிவித்துள்ளார்.

நாட்டின் இறைமை, ஒற்றுமை, பாதுகாப்பு, தேசியவாதம் என்பவற்றுக்கு அச்சுறுத்தலாக இருந்த உத்தேச அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டநகல் மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் தற்காலிகமாகவாபஸ் பெறப்பட்டிருப்பது தேசாபிமானம் மிக்க இலங்கை மக்களுக்குச் சற்று நிம்மதி அளித்துள்ளது.

இவ்வாறு அவர் விடுத்த ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-5-6-7)

## புலி உறுப்பினரின் சடலம் நேற்று அவர்களிடம் ஒப்படைப்பு!

### நீர்வேலி தரவைப் பகுதியில் வைத்து

யாழ்ப்பாணம்,ஓக.13

சரசாலைப்பகுதியில் இடம்பெற்ற மோதலில் உயிரிழந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரின் சடலம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரால் விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் நேற்று கைதடிக்கும் நீர்வேலிக்கும் இடைப்பட்ட தரவைப் பகுதியில் வைத்து சடலத்தை புலிகளிடம் ஒப்படைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 10ஆம் திகதி அதிகாலை சரசாலைப்பகுதியில் இடம்பெற்ற மோதலில் உயிரிழந்த பிரஸ்தாப புலி உறுப்பினரின் சடலத்தைப் படையினர் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

சடலத்தை விடுதலைப்புலிகளிடம் கையளிப்பதற்காக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் இரு தரப்பாருடனும் தொடர்புகொண்டு இணக்கம் காணப்பட்டதை அடுத்தே நேற்று சடலம் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ஐ-5)

## 'ராகிங்' மோதல் நேற்றும் நீடிப்பு:
## கலைப்பீட மாணவனும் தாக்கப்பட்டுக் காயம்!

யாழ்ப்பாணம்,ஓக.13

யாழ். பல்கலைக்கழக சூழலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களின் எதிரொலியாக நேற்றுக் கலைப்பீட மாணவன் ஒருவர் விஞ்ஞானபீட மாணவர்களினால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

தலையில் பிடரிப் பகுதியில் கூரியமுனையுடைய ஆயுதம் ஒன்றினால் குத்திக் காயப்படுத்தப்பட்ட இந்த மாணவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இதேவேளை -

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தாக்குதலில் காயமடைந்த விஞ்ஞானபீட முதலாம் வருட மாணவன் இ. ஷாஜகானும் சிகிச்சைக்காக இந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ராகிங்கை எதிர்த்ததற்காக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட முதலாம் வருட மாணவனான இ.ஷாஜகான் இரண்டாம் வருட மாணவர் குழுவொன்றினால் நேற்றுமுன்தினம் தாக்கப்பட்டதும் -

இத்தாக்குதல் சம்பவத்துக்கு நியாயம் கேட்கச்சென்ற வேறு பீடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பூந்தோட்ட முகாம் அகதிகள் சாகும்வரை உண்ணாவிரதம்!

வவுனியா,ஓக.13

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி முகாமில் தங்கியுள்ள அகதிகள் தமது கோரிக்கை நிறைவேறும்வரை சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

கடந்த ஒன்றரை மாதங்களாக நிறுத்தப்பட்டிருக்கும் உலர் உணவு நிவாரணத்தை வழங்குமாறும், நிவாரணக் கொடுப்பனவைப் பணமாக வழங்குமாறும் கோரி கடந்த வியாழன் முதல் இவர்கள் சுழற்சி முறையில் உண்ணாவிரதம் மேற்கொண்டு வந்தனர்.

இந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததால் நேற்றுமுதல் இவர்கள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-5-164)

## வவுனியா செயலக அதிகாரிகள் அகதிகளால் தடுத்து வைப்பு!

### பொலீஸார் தலையிட்டு மீட்டனர்

வவுனியா,ஓக.13

வவுனியா பூந்தோட்ட நலன்புரி முகாமில் உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் அகதிகளுக்கு நேற்று நிவாரணப் பணம் வழங்கச்சென்ற வவுனியா அரச செயலக அதிகாரிகள் அகதிகளால் தடுத்துவைக்கப்பட்டனர்.

செயலக அதிகாரிகள் தடுத்து வைக்கப்பட்டதை அடுத்து அங்கு விரைந்து சென்ற பொலீஸ் அதிரடிப் படையினர் அதிகாரிகளை மீட்டு வந்தனர். இச்சம்பவத்தின்போது அகதிகள் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

(12ஆம் பக்கம்பார்க்க)

## ரூ.160 கோடிக்கு ஆயுத தளபாடங்கள் இந்தியாவிடமிருந்து அரசு வாங்கும்!

கொழும்பு,ஓக.13

சுமார் 160 கோடி ரூபா பெறுமதியான இராணுவ ஆயுதத் தளபாடங்களை இந்தியாவிடமிருந்து இலங்கைப் படைகள் கொள்வனவு செய்ய இருப்பதாகப் புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான உடன்படிக்கையில் இந்திய - இலங்கை அதிகாரிகள் கடந்த வெள்ளியன்று கைச்சாத்திட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நவீன ஆயுதங்கள், டோறா மற்றும் அதிவேக ரோந்துப்படகுகள், தூர இடங்களைச் சென்று தாக்கக்கூடிய எறிகணைகள், விமானத்திலிருந்து ஏவப்படும் ஏவுகணைகள் என்பன இவற்றில் அடங்கும் எனத் தெரிகின்றது.

விசாகபட்டினத்திலுள்ள இந்துஸ்தான் ஷிப்யாட் நிறுவனத்தில் கட்டப்பட்ட ஷர்தார் (Shardaer) என்ற ரோந்துக் கப்பலையும் இலங்கைக்கு இந்தியா விற்க இருப்பதாக இந்தியப்பாதுகாப்பு அமைச்சுத் தகவல்கள் தெரிவித்தன .

இது தவிர தரையிலிருந்து தரைக்கு ஏவக்கூடியதும் கடலோர ரோந்துப்படகுகளில் பொருத்தப்படுவதுமான பீரங்கிகளையும் இலங்கைக் கடற்படை இந்தியாவிடமிருந்து பெறவிருக்கின்றது.

(12ஆம் பக்கம்பார்க்க)

## குமார் பொன்னம்பலத்துக்கு கனடாவில் நினைவு முத்திரை



றொறன்ரோ,ஓக.13

அமரர் குமார் பொன்னம்பலத்தின் ஞாபகார்த்தமாக கனடாவில் அடுத்த மாதம் 15 ஆம் திகதி நினைவு முத்திரை வெளியிடப்பட உள்ளது. கனேடிய அஞ்சல் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் இந்த முத்திரை வெளியிடப்படுகிறது.

கனடாவில் 'தமிழன் வழிகாட்டி' என்னும் விளம்பரத் தொகுப்பினை ஆண்டு தோறும் வெளியிட்டுவரும் ஆதவன் வெளியீட்டாளர்கள் இந்தத் தபால் முத்திரையை வெளியிட ஏற்பாடு செய்துள்ளனர்.

அடுத்த மாதம் 15ஆம் திகதி றொறன்ரோ மாநகரில் நடைபெறவுள்ள இந்த நினைவு முத்திரை வெளியீட்டு விழாவில் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜிம் கரிஜியானிஸ் கலந்துகொண்டு முதல் நாள் அஞ்சல் முத்திரைத் தபால் உறையை வெளியிட்டு வைப்பார்.

இந்த முத்திரையை அஞ்சல் உபயோகத்துக்கு கனடாவில் பயன்படுத்தலாம். இதன் விற்பனை மூலம் சேகரிக்கப்படும் நிதி கனேடிய பொதுஸ்தாபனங்கள் இரண்டுக்குப் பகிர்ந்தளிக்கப்பட உள்ளதாக 'தமிழன் வழிகாட்டி' பிரசுர அதிபர் திரு.செந்திலாதன் தெரிவித்துள்ளார்.

அமரர் குமார் பொன்னம்பலத்தின் முத்திரையை இலங்கை உட்பட வேறு நாடுகளில் உள்ளவர்களும் தமது நிறுவனத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ)

## அதிர்ஷ்டம் பார்க்கப்படும்

ஆனைக்கோட்டை கலை ரியூசன் சென்ரரினால் 25-06-2000 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு 25-09-2000 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படவுள்ளது என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

– நிர்வாகி

(77265)



## அதிசயம் லாலாவின் ஆனால் உண்மை

அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்!
பாவனையாளர்க்கு மட்டுமே அதிர்ஷ்டம் காத்திருக்கின்றது!
மிக விரைவில் எதிர்பாருங்கள்!
எமது ஸ்தாபனத்தாரின் அதிர்ஷ்டலாபச் சீட்டினை

*லாலா நீலசோப், சன் சைன் சோப்*

என்ன? பரிசைத் தட்டிச் செல்ல ஆர்வம் தானே!
ம்! பளிச்சிடும் வெண்மைக்கு நிகர்
*லாலா! என்றால் லாலா தான்.*

**லாலா சோப் தொழிற்சாலை**
- அச்சுவேலி

(C/12486)



பருத்தித்துறையில்
**கணனி வகுப்புக்கள் - MS OFFICE 97**

விசேடமாக A/L 2000 மாணவர்களின் நன்மைக்காக
எமது மூன்றாவது பிரிவு
*செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகிறது.*

- ★ *விண்ணப்பப்படிவங்களை இம்மாதம் 19ஆம், 20ஆம் திகதிகளில் பெறலாம்.*
- ★ *பதிவுகள் 24-08-2000 வியாழன் பி.ப. 4மணிக்கு.*
- ★ *30 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி.*

**GKM கணனிப்பிரிவு**
(ஞானசம்பந்தர் கலைமன்றம்)
*வல்லிபுரம் பரியாரியார் வீதி,*
*பருத்தித்துறை.* (C/12482)



## அறிவித்தல்

யாழ். பிரதான தாங்கியின் கிழக்குப் பகுதியாகிய ஈச்சமோட்டை, பாஷையூர், கொழும்புத்துறை, கொய்யாத்தோட்டம், பழையபூங்கா வீதி, விதானையார் வீதி, காட்டுக்கந்தோர் வீதி, பிரதான வீதி ஆகிய இடங்களில் ஏற்கனவே நீர் விநியோகக் குழாய்கள் துப்புரவாக்கப்பட்டு குடிதண்ணீர் விநியோகம் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்விடங்களில் உள்ள குழாய் நீரை குடிதண்ணீர் பாவனைக்குப் பயன்படுத்தலாம்.

பிரதான தாங்கியின் மேற்குப் பகுதியாகிய 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம், 6ஆம் குறுக்குத்தெரு, கொட்டடி, நாவாந்துறை, கற்குளம் கண்ணாபுரம், தேவாலய வீதி, கல்லூரி வீதி, காரைநகர் வீதி, கெனடி வீதி, வில்லூன்றிப் பிள்ளையார் வீதி, ஓட்டுமடம் மானிப்பாய் வீதி ஆகிய வீதிகளில் நீர் விநியோகக் குழாய் சுத்திகரிப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் இவ்விடங்களில் உள்ள நீர்க் கம்பங்களில் இருந்து வரும் நீரையும், வீடுகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் குழாய் நீரையும் பருக வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**வே.பொ.பாலசிங்கம்,**
**மாநகர ஆணையாளர்,**
*யாழ்ப்பாணம்.*

*மாநகரசபை அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*
2000-08-12 (C/12487)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அரசியல் ஆலோசகரும்,
நயினை மண் பெற்றெடுத்த அரும் புதல்வனுமாகிய
கௌரவ கலாநிதி
**காசிலிங்கம் விக்னேஸ்வரன்** அவர்கள்
மற்றும் ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் தலைவராக இருந்தவரும்,
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதிப் பிரதம அரசியல் அமைப்பாளரும், தீவக அரசியல் அமைப்பாளருமான தீவகம் தந்த மைந்தன்
கௌரவ
**நடராசா மதனராஜா** அவர்கள்
ஆகிய இருவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதையிட்டு எமது உளங்கனிந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்வதோடு இந்த உயர் பதவியினை வழங்கியமைக்காக
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும்,
யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய
கௌரவ
**கே. என். டக்ளஸ் தேவானந்தா**
அவர்களை மனமார வாழ்த்தி நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதோடு இவர்களது மக்கள் சேவை தொடர என்றும் எழில் வீசும் எழிலாள் நயினை நாகம்மையின் அருட் கருணையினை வேண்டி நிற்கின்றோம்.

**தலைவர், உறுப்பினர்கள், செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.**
*வேலணை பிரதேச சபை.* (77251)


## விரிவுரைகள் புதனன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.13

யாழ்.பல்கலைக்கழக மீன்பிடியியல் டிப்ளோமா கற்கை நெறியின் இரண்டாவது அணியினருக்கான விரிவுரைகள் எதிர்வரும் 16ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

பதிவு செய்த மாணவர்கள் அனைவரையும் குறிப்பிட்ட தினத்தன்று காலை 9.30 மணிக்கு வருகை தருமாறு மீன்பிடியியல் கற்கை நெறியின் இணைப்பாளர் கே.சித்திரவடிவேல் தெரிவித்துள்ளார்.

(ஐ-10)

## யாழ்ப்பாணத்திலும் போட்டியிடும்

கொழும்பு,ஓக.13

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணி யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் 6 மாவட்டங்களில் தனித்துப் போட்டியிடப்போவதாக அறிவித்துள்ளது.

காலி, களுத்துறை மற்றும் கொழும்பு, திருகோணமலை, புத்தளம், அம்பாறை ஆகியனவே அக்கட்சி போட்டியிடவுள்ள ஏனைய மாவட்டங்களாகும்.

விரைவில் இந்த மாவட்டங்களுக்கான வேட்பாளர்களின் விவரங்கள் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)


**பட்டப்படிப்புகள் கல்லூரி**
57/13, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
★ B.A. பேராதனை
★ B.Com. III
*விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.*
**G.A.Q. 1st in Com. 2000**
**மீட்டல் விரிவுரைகள்**
அனைத்துப் பாடங்களும்
ஆரம்பம்:-
**20-08-2000**
*காலை 9 மணிக்கு*
(77268)



**ராஜா**
(யாழ்ப்பாணம்)
அர்ஜுன், ரேவதி,
வடிவேல், மணிவண்ணன்
மற்றும் பலர் நடிப்பில்
**சுபாஸ்**
காட்சிகள்: 10-30, 2-00
(புதிய நேரம்)
(C/12325)



**நாகம்ஸ்**
சுன்னாகம்.
17–08–2000 வரை
ரஜனி, சௌந்தர்யா
நடிப்பில
**படையப்பா**
(ரீல்ஸ்)
காட்சிகள்:
11.00, 2.30 (புதிய நேரம்)
(77238)



**ECONOMICS**
PERSONAL CLASSES
- * A/L 2001 PAPER CLASS
- * A/L 2002 NEW BATCH
- * G.A.Q. 1st in Com.

B.A. Part I , B.Com. Part I
By:- விஜெ. தயா
*B.A. (Econ.) Special*
ஆரம்பம்: 14.08.2K (நாளை)
காலை 10 மணி
தொடர்பு:
C/O. இல.275,
கோணேசா இல்லம்,
யாழ்வீதி, மானிப்பாய்.
*(மானிப்பாய் மகளிர் கல்லூரி அருகில்)*
(77245)


# பாணின் விலை நிர்ணயம்; இன்னும் முடிவு இல்லை!

## 2ஆவது முறையும் கூடிக் கலைந்தனர்

யாழ்ப்பாணம்,ஓக.13

450 கிராம் பாணுக்கு விலை நிர்ணயம் செய்வது தொடர்பாக நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் நடத்தப்பட்ட கூட்டம் முடிவு எதுவும் எடுக்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

யாழ். அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பாவனையாளர் பாதுகாப்புச் சங்கம், பேக்கரி உரிமையாளர் சங்கம், ப.நோ.கூ. சங்கங்களின் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் பாணின் நிர்ணய விலை தொடர்பாக ஒவ்வொரு அமைப்புக்களின் பிரதிநிதிகளும் ஒவ்வொரு விலைகளைத் தெரிவித்தனர்.

இறுதியில் 450 கிராம் பாண் 9 ரூபா 50 சதத்துக்கு விற்பனை செய்யப்படவேண்டும் என்று கூட்டத்தில் இருந்த பலரும் தீர்மானித்த போது, பேக்கரி உரிமையாளர் சங்கத்தினர் அதற்கு மறுப்புத் தெரிவித்தனர்.

450 கிராம் பாணை 10 ரூபாவுக்குக் குறைவாகத் தம்மால் விற்பனை செய்யமுடியாது என்று அவர்கள் தெரிவித்தனர்.

சுமார் ஒன்றரை மணி நேரம் நடைபெற்ற இந்தக் கூட்டம் விலை எதுவும் நிர்ணயம் செய்யப்படாமலேயே அடுத்த வெள்ளிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது. பாணுக்கு விலை நிர்ணயம் செய்வது தொடர்பாக மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் தலைமையில் கூட்டப்பட்ட கூட்டமும் முடிவு எதுவும் எடுக்கமுடியாத நிலையில் ஒத்திவைக்கப்பட்டது தெரிந்ததே.

(ஐ-5)

## கோப்பாயில் தங்கியுள்ள தென்மராட்சிக் குடும்பங்கள் நிவாரணம் பெறும் கிளைகள்

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருப்பவர்களுக்கான இடம்பெயர்ந்தோர் நிவாரணம் இம்மாதம் முதல் பின்வரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூலம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இருபாலை தெற்கு, இருபாலை கிழக்கு, கல்வியங்காடு, கோப்பாய் தெற்கு, கோப்பாய் மத்தி, கோப்பாய் வடக்கு, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய் கிழக்கு, ஊரெழு ஆகிய பதினொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் தங்கியுள்ளோருக்கு கோப்பாய்-உரும்பிராய் வீதியில் இயங்கி வரும் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையிலும் -

நீர்வேலி தெற்கு, நீர்வேலி வடக்கு, நீர்வேலி மேற்கு, அச்செழு, சிறுப்பிட்டி மேற்கு, சிறுப்பிட்டி கிழக்கு, புத்தூர் மேற்கு, புத்தூர் கிழக்கு, வாதரவத்தை ஆகிய 9 கிராம உத்தயோகத்தர் பிரிவுகளில் தங்கியுள்ளோருக்கான நிவாரணம் நீர்வேலி அரசகேசரி பிள்ளையார் கோயிலடியில் உள்ள கைதடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையிலும் -

புத்தூர் வடக்கு, நவக்கிரி, ஆவரங்கால் கிழக்கு, ஆவரங்கால் மேற்கு, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி மேற்கு, பத்தைமேனி, தம்பாலை, கதிரிப்பாய், இடைக்காடு, வளலாய் ஆகிய 11 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் தங்கியுள்ளோர்களுக்கு ஆவரங்காலில் உள்ள கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளையிலும்-

நிவாரணப் பொருள்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-180)

## நோயாளர் கப்பல் சேவை

யாழ்ப்பாணம்,ஓக.13

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் கப்பல் மூலம் மேலதிக சிகிச்சைக்காக எதிர்வரும் 21ஆம் திகதி கொழும்பு செல்வதற்குப் பதிவு செய்தவர்களையும், உதவியாளர்களையும் மறுநாள் எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 7 மணிக்குப் பயண ஏற்பாடுகளுடன் சமுகமளிக்குமாறு யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (க)


## கண்ணீர் அஞ்சலி

வடமராட்சி கிழக்கு கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின்
கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்
த. செல்வசோதியின் அன்புத் தந்தை
**அமரர் கந்தையா தங்கராசா**
அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

**தலைவர், பணிப்பாளர்கள்.**
*வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும் – சமாசமும்.*
(77260)



**யாழ்ப்பாணம் Y.M.C.A வாலிபர்களுக்கு,**

## அவசர கலந்துரையாடல்

இடம்பெயர்ந்துள்ள யாழ்ப்பாண Y.M.C.A. வாலிபர்கள் அனைவரும் எதிர்வரும் 15-08-2000 செவ்வாயன்று காலை 9 மணிக்கு நவாலி Y.M.C.A. மண்டபத்துக்கு சமுகம் தரவும். வரமுடியாதவர்கள் தவறாது தமது விவரங்களையும், இடம்பெயர்ந்துள்ள, தங்கியுள்ள முகவரிகளையும் அக்கூட்டத்துக்கு அனுப்பிவைக்கவும்.

**அருட்திரு. யூட் சுதர்ஷன்**
*வாலிபர் பகுதி,*
*Y.M.C.A.*
*யாழ்ப்பாணம்:*
(77255)



## முக்கிய அறிவித்தல்

மாகாணசபையின் எழுதுநர் மற்றும் அதனுடன் இணைந்த சேவையின் நியமனத்தில் பாதிக்கப்பட்ட அனைவரையும் நாளை (14-08-2000) திங்கட் கிழமை காலை 10 மணிக்கு ஆரியகுளம் DMI இல் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

*தகவல்:*
**T.Sivakukan.**
*(செயலாளர்)*
(77261)

# வீரப்பனுக்குத் தீவிரவாதிகளுடன் தொடர்புண்டு என்கிறார் கோபால்!

## பூலான்தேவி போல் அரசியலில் ஈடுபடுவாரா?

சென்னை,ஒகஸ்ட்13

**சந்தனக் கடத்தல்காரன் வீரப்பன் கிட்டத்தட்ட ஒரு சர்வாதிகாரியாக மாறிவிட்டதாகவும், அவருக்கு தமிழ்த் தீவிரவாதிகளுடன் தொடர்பிருப்பது உண்மை என்றும் 'நக்கீரன்' கோபால் கூறியுள்ளார்.**

**இத்தகவல்களை அடுத்து கொள்ளைக்காரி பூலான்தேவி போல் வீரப்பனும் தனது பாதுகாப்புக்காக அரசியலை கேடயமாக்குவதாகச் சந்தேகம் எழுந்துள்ளது.**

கன்னட நடிகர் ராஜ்குமாரையும் வேறு மூவரையும் கடத்திச் சென்றுள்ள வீரப்பனிடம் தமிழக, கர்நாடக அரசுகளின் தூதராக சென்றிருந்த 'நக்கீரன்' கோபால் திரும்பி வந்த பின்னர் பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தினார்.

அங்கு கோபால் பேசுகையில், வீரப்பனிடமிருந்து ஒளிநாடா மற்றும் ஒலிநாடா ஆகியவற்றுடன் கடிதம் ஒன்றையும் எடுத்து வந்து முதல்வர் கருணாநிதியிடம் கொடுத்துள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் வீரப்பன் குழு, தமிழ் தேசிய மீட்புப் படை, தமிழர் விடுதலைப் படை என்று அச்சிடப்பட்டிருந்த இடத்தில் வீரப்பன் தன் கையெழுத்தை இட்டிருப்பதாகவும் கூறினார்.

ஒலிநாடாவில் பழைய நிபந்தனைகளுக்கான பதில்கள் குறித்து விளக்கங்கள் கேட்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த கோபால், வீரப்பன் அனைத்து முடிவுகளுக்காகவும் 8 நாள் காலக்கெடு விதித்திருப்பதாகவும், அதற்குள் தான் திரும்பிச் சென்று அவரைச் சந்திக்க வேண்டும் என்றும் கூறினார்.

செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில், தமிழ் தீவிரவாதிகளுடன் வீரப்பனுக்குத் தொடர்பிருப்பது நூற்றுக்கு நூறு உண்மை. ஆனால் எந்த இயக்கத்துக்கும் கைப்பாவையாக இல்லாமல், அந்தக் கும்பலுக்கு அவரே தலைவராக இருக்கின்றார். 3 ஆண்டுகளின் முன் அவரைப் பார்த்ததற்கும் இப்போது பார்ப்பதற்கும் அதிக வேறுபாடுகள் உண்டு. அவர் ஒரு தமிழ் தீவிரவாதியாகவே மாறிவிட்டார் என்றும், 6 கோடித் தமிழர்களுக்காகப் போராடுகிறேன் என்று கூறிய வீரப்பன் பொது மன்னிப்போ பணமோ கேட்கவில்லை என்றும் கோபால் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் வீரப்பனுக்கும் தொடர்பிருக்கிறதா என்று தனக்குத் தெரியாது என்றும் நக்கீரன் கோபால் தெரிவித்தார்.

இதற்கிடையில், பொது மன்னிப்புக் கோரிக்கையில் தனக்காகக் குரல் கொடுக்க ஆதரவு திரட்டவே வீரப்பன் தமிழ் பற்றாளர் போல் நாடகமாடுவதாகவும், முன்னாள் கொள்ளைக்காரி பூலான்தேவி போல் அரசியலில் ஈடுபட்டுத் தனக்குப் பாதுகாப்பு தேட முயல்வதாகவும் தமிழகத்தில் சந்தேகங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

பலகொலைகளைச் செய்த கொள்ளைக்காரியான பூலான்தேவி சரணடைந்து மனனிப்புப் பெற்றதுடன், தேர்தலில் போட்டியிட்டு இந்திய நாடாளுமன்ற உறுப்பினரானது குறிப்பிடத்தக்கது.

(இ-ஓ-4)

## எரிமலை வெடித்தது

டோக்கியோ,ஓக.13

ஜப்பானில் 'ஓயாமா' எரிமலை மீண்டும் வெடித்துள்ளது.

தலைநகர் டோக்கியோவில் இருந்து தெற்கே 113மைல் தொலைவில் மியாக்கேஜிமா தீவில் உள்ள ஓயாமா எரிமலை கடந்த ஜூலை 15ஆம் திகதி தீக்குழம்பைக் கக்கியிருந்தது. தற்போது முன்பை விட அதிகமாக தீக்குழம்பை ஓயாமா எரிமலை வெளிவிடுவதாகக் கூறப்படுகிறது.



தூதர் கோபால் வீரப்பனுடன் உரையாடும் காட்சி. அருகில் கடத்தப்பட்ட ராஜ்குமாரும் மற்றவர்களும்.

## வீரப்பனின் புதிய நிபந்தனைகள்

சென்னை,ஓக.13

சந்தன மரக்கடத்தல்காரன் வீரப்பன் தமிழக முதல்வர் கருணாநிதிக்கு 'நக்கீரன்' கோபாலிடம் கொடுத்தனுப்பிய ஒலிநாடாவில் மேலும் 4 புதிய நிபந்தனைகளை விதித்துள்ளார். அந்த நிபந்தனைகளும் அவற்றிற்கு தமிழக முதல்வரின் பதில்களும் பின்வருமாறு.

★ தமிழகம் மற்றும் கர்நாடகத்துக்கு இடையேயான காவிரிநதி நீர்ப்பிரச்சினையை சர்வதேச நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

❒ காவிரி பிரச்சினையை சர்வதேச நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்ல முடியாது.

★ தமிழ் நாட்டில் 10ஆம் வகுப்பு வரை தமிழில் மட்டுமே கற்பிக்க வேண்டும்.

❒ 5ஆம் வகுப்பு வரை தமிழ் மூலம் கல்வி என்ற ஆணை நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டுள்ளது. 10ஆம் வகுப்பு வரை தமிழில் கல்வி என்பது சட்டப்படி சாத்தியமா என்பது பரிசீலிக்கப்படும்.

★ வாச்சாத்தி, சின்னாளம்பட்டி ஆகிய கிராமங்களில் பொலீஸாரால் மானபங்கப்படுத்தப்பட்ட தலித்பெண்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும்.

❒ அ.தி.மு.க.ஆட்சியில் நடந்த இந்த சம்பவத்திற்கு விசாரணைகளின் பின்னர் நஷ்டஈடுகள் வழங்கப்பட்டு விட்டன.

★ தமிழக சிறையில் உள்ள 5 தீவிரவாதிகளை விடுதலை செய்ய வேண்டும்.

❒ விடுதலை செய்யத்தயார். ஆனால் நடப்பு நெருக்கடி முடிவுக்கு வந்தால் மட்டுமே அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள்.

## விரைவில் பாரிய குண்டுத்தாக்குதல்; இந்தியாவுக்கு முஜாஹிதீன்கள் மிரட்டல்

ஜம்மு,ஓக.13

இந்தியாவில் அடுத்துவரும் சில நாட்களில் இதுவரை சந்தித்திராத பாரியவெடி குண்டுத்தாக்குதல்களைத் தாம் நடத்தப்போவதாக ஹிஸ்புல் முஜாஹிதீன்கள் மிரட்டியுள்ளனர்.

ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பின் தலைவர் சையத் சலாவுதீன் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முஜாஹிதீன்கள் ஒரு தரப்பாக தாக்குதல் நிறுத்தத்தை மேற்கொண்டு அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கிய போதும் இந்திய அரசு தம்முடன் இணங்காததைக் கண்டித்துள்ள சலாவுதீன், அதற்காக மிகப்பெரிய விலையை இந்தியா கொடுக்க நேரிடும் என்றும் அறிக்கையில் தெரிவித்துள்ளார். காஷ்மீரில் மட்டுமல்லாது இந்தியா முழுவதும் தமது தாக்குதல்கள் பரவும் என்றும்,

கடந்த 10 வருடங்களில் நாடு கண்டிராத பெரும் குண்டுத்தாக்குதல்களைத் தாம் அடுத்த சில தினங்களுக்குள் நடத்தப் போவதாகவும் அந்த அறிக்கையில் சலாவுதீன் கூறியுள்ளார்.

காஷ்மீரில் ஒரு தரப்பு தாக்குதல் நிறுத்தம் அறிவித்த முஜாஹிதீன்கள் இந்திய அரசுடனான பேச்சு வார்த்தைகளில் பாகிஸ்தானையும் சேர்க்க வேண்டும் என்று கோரியதும், அதனை இந்தியா ஏற்க மறுத்ததால் முஜாஹிதீன்கள் தாக்குதல் நிறுத்தத்தை விலக்கிக் கொண்டதும் தெரிந்தவையே (ஓ)

## தமிழக முன்னாள் அமைச்சருக்கு ஊழல் வழக்கில் 3 ஆண்டுகள் சிறை

### மனைவி, மகளுக்கும் தண்டனை

சென்னை,ஓக.13

தமிழக முன்னாள் அமைச்சர் பேராசிரியர் பொன்னுசாமிக்கு வருமானத்தை மீறிச் சொத்துச் சேர்த்த குற்றத்திற்காகச் சிறப்புத்தனி நீதிமன்ற நீதிபதி 3ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தார்.

ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில் கல்வி அமைச்சராகப் பதவி வகித்த பொன்னுசாமி தனது வருமானத்துக்கு மீறிய வகையில் சுமார் 77கோடி ரூபா சொத்துக்களை சேர்த்தாக வருமான வரித்துறை தொடர்ந்திருந்த வழக்கில் அவருக்கு சிறைத்தண்டனையுடன் ஒரு லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதேவழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த பொன்னுசாமியின் மனைவி பிரபாவதி, மகள் மாலா உட்பட 4 பேருக்கு ஒரு ஆண்டு கடுங்காவல் சிறைத் தண்டனையும் தலா 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

(ஓ-4)

## மேற்கு வங்க அரசுக்கு எதிராக சதி செய்கிறதாம் அமெரிக்கா

### ஜோதிபாசு பிரதமரிடம் முறைப்பாடு

கல்கத்தா,ஓக.13

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் ஆளும் கம்யூனிச அரசைக் கவிழ்ப்பதற்கு அமெரிக்கா சதி செய்து வருவதாக அம் மாநில முதல்வர் ஜோதிபாசு குற்றஞ் சாட்டியுள்ளார்.



இது குறித்து பிரதமர் வாஜ்பாய்க்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் மாநிலத்தில் எதிர்க்கட்சிகளான பாரதீய ஜனதா, மற்றும் திரிணாமூல் காங்கிரஸ் ஆகியவற்றுக்கு அமெரிக்கத் தூதரகம் மூலம் உதவிகள் கிடைத்து வருவதாகச் சுட்டிக்காட்டியதுடன்,

மேற்கு வங்க அரசியல் உள் விவகாரங்களில் அமெரிக்கத் தூதரகம் மூக்கை நுழைக்காமல் தடுக்கும்படியும் கேட்டுள்ளார்.

சமீபத்தில் மேற்கு வங்கத்தில் இடம்பெற்ற இரண்டு குண்டு வெடிப்புச் சம்பவங்கள் குறித்து ஆராய இந்தியாவிற்கான அமெரிக்கத் தூதர் கார்ரோலினி இரண்டு அரசியல் ஆய்வாளர்களை அனுப்பியிருந்ததையும் ஜோதிபாசு கடுமையாகப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் சாடியுள்ளார்.

இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி பலம்பெற்ற மாநிலமாக உள்ள மேற்கு வங்கத்தில் கடந்த 20 ஆண்டுகளாக ஜோதிபாசு தலைமையிலான கம்யூனிச அரசு தேர்தல்களில் வெற்றி பெற்றுத் தொடர்ந்து ஆட்சியில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

### புதிய மாநிலம் அமைக்க ஆதரவு

புதுடில்லி,ஓக.13

உத்தரப்பிரதேச மாநிலத்தை பிரித்து புதிய உத்தராஞ்சல் மாநிலத்தை உருவாக்க வகைசெய்யும் பிரேரணை இந்திய நாடாளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நாடாளுமன்றத்தில் இப்பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டபோது நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாய்மொழிமூல வாக்கின் மூலம் பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கடந்தவாரம் இந்த பிரேரனை மக்களவையில் சமர்ப்பிக்கப்பட்டு சபை அங்கீகாரத்தையும் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

### கடத்தப்பட்ட கார்

ஸ்ரீநகரில் கார்க்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட கார் திருடப்பட்டு அங்கு கடத்திவரப்பட்டிருப்பதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தியாவின் வராவல் பகுதியில் இருந்தே இக்கார் திருடப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## பிரிட்டனில் தஞ்சம் கோருவோரின் கைரேகை பதிவு செய்ய புதிய கருவி!

லண்டன்,ஓக.13

பிரிட்டனில் தஞ்சம் கோரும் விண்ணப்பங்களில் துஷ்பிரயோகங்கள் நடைபெறுவதைத் தடுப்பதற்காக விண்ணப்பதாரிகளின் கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யும் புதிய தன்னியக்க உபகரணங்களை பிரிட்டிஷ் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தப் புதிய உபகரணங்கள் பிரிட்டன் குடிவரவு மற்றும் புகலிடப் பரிசீலனை அலுவலகங்களில் சேவையில் ஈடுபடுத்தபட்டுள்ளன. அங்கு புகலிடம் கோருபவர்களது கைவிரல் அடையாளங்கள் பதிவு செய்யப்பட்டு சேமிக்கப்படுகிறது.

தற்போது லண்டனுக்கு அண்மையில் உள்ள குடிவரவு மற்றும் புகலிடப் பரிசீலனை அலுவலகங்களில் உபயோகப்படுத்தப்படும் புதிய உபகரணங்கள் அடுத்து 16 பிரதான நிலையங்களிலும், எதிர் வரும் 2001ஆம் ஆண்டு மார்ச்மாதத்திற்குள் புகலிடம் கோருவோர் தொடர்பான அனைத்து அலுவலகங்களிலும் ஸ்தாபிக்கப்படும் என்று பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்புதிய முறை புகலிடம் கோரி ஒரே சமயத்தில் பல விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பவர்களை அடையாளம் காணவும்.

ஏற்கனவே புகலிடக் கோரிக்கை மறுக்கப்பட்டு மீண்டும் விண்ணப்பித்தவர்களைக் கண்டுபிடிக்கவும் உதவும் என்று அதிகாரி மேலும் தெரிவித்தார்.

விரைவில் ஐரோப்பிய நாடுகளிடையே இணையத்தளத்தின் மூலம் இணைக்கப்பட உள்ள கைவிரல் ரேகைப் பதிவுத்தகவல்கள் ஐரோப்பிய நாடொன்றிலிருந்து புகலிடம் கோருவதற்காக மற்றொரு ஐரோப்பிய நாட்டுக்குச் செல்பவர்களை அடையாளம் காண்பதில் கூடிய பங்காற்றும் என்று கருதப்படுகிறது.

(ஓ-6)

# குறைந்த வசதிகளுடன் இயங்கும் யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி

யாழ்ப்பாணம், ஓக. 13

மத்திய அரசின் கீழ் இயங்கும் யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி நிர்வாகத்தினர் மத்திய அரசுடன் தொடர்பு கொள்ள முடியாத நிலையிலுள்ளனர். தொடர்புகள் இலலாத நிலையில் கல்லூரிக்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கல்லூரியில் தொலைத்தொடர்பு வசதிகள் இல்லை என்றும் —

அவசரதேவைகளுக்காக வெளி இடங்களிலிருந்து குறிப்பிட்ட அமைச்சுடன்தொடர்பு கொள்ள முயன்றாலும் இணைப்புகளைப் பெற முடியாதிருப்பதாகவும் கல்லூரியின் பீடாதிபதி தி. கமலநாதன் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:–

அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் இந்தக் கல்லூரி பாடசாலைகளுடன் தொடர்புடையதாக இருப்பதால் இங்குள்ள மாணவர்களை பாடசாலைகளுக்கு அழைத்துச்செல்ல வேண்டும்.

இவ்வாறு மாணவர்களை அழைத்துச் செல்வதற்கு இக் கல்லூரியில் போக்குவரத்து வசதிகள் எதுவும் இல்லை. எமது நிலையை உணர்ந்து ஈ.பி.டி.பி யினரால் ஓட்டோ ஒன்றும் கார் ஒன்றும் வழங்கப்பட்டுள்ளன.

கல்லூரியில் விஞ்ஞானம் மற்றும் கணிதபாட நெறிகளைப் போதிப்பதற்கு ஆய்வுகூட வசதிகள் எதுவும் இல்லை.

இக்கல்லூரிக்கு என 10 லட்சத்து 75 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்ட போதிலும் கல்லூரிக்கெனத் திறைசேரி ஊடாகக் கணக்கு ஆரம்பிப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது — என்றார். (இ 5-10)

## யாழ். கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர்கள் சம்பளம் வலயப் பணிப்பாளர் மூலம்

யாழ்ப்பாணம், ஓக. 13

யாழ். கல்வியியல் கல்லூரியில் பணிபுரியும் பதினொரு விரிவுரையாளர்களுக்கும் உரிய சம்பளத்தை மாகாணக் கணக்காளர் மூலமாக அந்த அந்த வலயப்பணிப்பாளர்கள் வழங்க வேண்டும் என்று பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான சம்பளத்தைக் கல்வியியல் கல்லூரி வழங்காது என்றும் —

கல்வி அமைச்சின் சுற்றறிக்கைப்படி இவர்களுக்கான சம்பளத்தை இவர்கள் முன்பு பணிபுரிந்த இடத்திலேயே பெறவேண்டும் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான சம்பளத்தை வழங்குவதில் நிலவும் இழுபறி காரணமாக மூன்று மாதங்களாக இவர்களுக்கான சம்பளம் வழங்கப்படாதது குறிப்பிடத்தக்கது. (இ-3)


### சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் பொதுக் கூட்டம்

தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்த சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற அங்கத்தவர்களுக்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் 20-08 2000அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சட்டைவேலி ப. நோ. கூ. சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் (மகாத்மா தியேட்டர் அருகில்) நெல்லியடியில் நடைபெறும். தென்மராட்சி பிரதேசச் செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளை அவர்கள் கலந்து கொள்வார்! சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தரும்படி வேண்டப் படுகின்றீர்கள்.

வ. இராஜதுரை
செயலாளர்

கைத்தொழில் வணிகர் மன்றம்,
சாவகச்சேரி.

((77249)



### முதலாம் ஆண்டு நினைவுக் காணிக்கை

தோற்றம்
12
07
1962



மறைவு
27
[illegible]
07
—
1999

### அமரர் சுப்பிரமணியம் தவராசா

(உரிமையாளர், லீலா ஸ்ரோர்ஸ், மூளாய் றோட், வட்டுக்கோட்டை)

**திதி: 13 – 08 – 2000 [பௌர்ணமி]**

ஒளி ஒன்று மறைந்து ஓர் ஆண்டு சென்றாலும் அப்பா! கவலை தீரவில்லை, கண்ணீர் குறையவில்லை. எம் குடும்பத்தின் தலைவனே! எம் இதயத்தின் தெய்வமே! எங்கு சென்று மறைந்தாயோ? எப்படி நாம் தாங்குவோம்? வியாபாரத்தில் தர்மமும், நேர்மையும் தழைத்திட பொருள் வளம் தேடி புகழுடன் வாழ்ந்து அனைவரையும் பண்புடன் பேணி நடந்த செம்மல்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மடத்துக்கரை அம்பாளை வேண்டுகிறோம்.

உங்கள் நினைவோடு வாழும்
**மனைவி, பிள்ளைகள், தந்தை, தாயார், சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்கள்.**

லீலா ஸ்ரோர்ஸ்,
மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை.

[77164]


## பரீட்சை நிலையம்

இன்று நடைபெறவுள்ள 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தென்மராட்சி மற்றும் பளைப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து தற்பொழுது யாழ்ப்பாணம், வலிகாமம் ஆகிய பகுதிகளில் தங்கியுள்ள மாணவர்களுக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் பரீட்சை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார். (இ-10)

## விடைத்தாள் மதிப்பீட்டாளர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஓக. 13

தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஜி. சீ ஈ (உயர்தரப்) பரீட்சையின் முதலாவது தொகுதி விடைத்தாள்கள் மதிப்பீட்டாளர்களுக்கு கொழும்பு செல்வதற்கான பிரயாண ஒழுங்குகள் யாவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆகவே மதிப்பீட்டாளர்கள் அனைவரையும் நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு பயணம் செய்வதற்கான ஆயதத்ங்களுடன் வேம்படி மகளிர் கல்லூரிக்கு வருகை தருமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் கேட்டுள்ளார். (இ-10)

## 3 கிலோ சீனி விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக.13

பல நோ. கூட்டுறவுச் சங்கங்களில் ''உ'' அட்டை வைத்திருப்பவர்களுக்கும் நிவாரணம் பெறாத ''அ'' அட்டை வைத்திருப்பவர்களுக்கும் மூன்று கிலோ சீனி கட்டுப்பாட்டு விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது

கிலோ 32 ரூபா வீதம் சீனி விற்பனை செய்யப்படுவதாக யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவினரால் கூட்டுறவுச் சமாசத்துக்கு வழங்கப்பட்ட 150 மெற்றிக்தொன் சீனி ப. நோ. கூ. சங்கங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டு பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்படவுள்ளது தெரிந்ததே. (ஐ-5-17).

## இன்று நடப்பவை!

யாழ்ப்பாணம், ஓக. 13

கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவனும் கலாபூஷணம் க. ப. சின்னராசாவின் மாணவனுமாகிய செல்வன் நா. மாதவனின் மிருதங்க அரங்கேற்றம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் கல்யாண மண்டபத்தில் கலாபூஷணம் மஹாவித்துவான் பிரம்ம ஸ்ரீ ந. வீரமணிஐயர் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப பணிப்பாளர் (சங்கீதம்) சு. கணபதிப்பிள்ளையின் பாட்டு இடம்பெறும். அதற்கு இசை சேர் கலைஞர்களாக உ, இராதாக்கிருஸ்ணன் (வயலின்), நா. மாதவன் (மிருதங்கம்), க. கஜன் (கடம்), கி, அனந்தகோபன் (கெஞ்சிரா) ஆகியோர் கலந்து கொள்வர். (க)

* * *

யாழ்ப்பாணம், ஓக். 13

வடபிராந்திய இந்துப் பேரவையின் யாழ். மாவட்டச் செயலாளர் தர்மதீபம் ப. சிவலோகநாதன் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதையிட்டு நடத்தப்படும் பாராட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு களவத்தை ஐக்கிய நாணய சங்கத் தலைவர் இ. சரவணபவானந்தன் தலைமையில் அராலி தெற்கு களவத்தை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாபூஷணம் பே. சந்திரசேகர சர்மாவும் சிறப்பு விருந்தினராக வலி. மேற்கு செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் நா. சுகராசாவும் கலந்து கொள்வர். (க)

* * *

வலி. தென்மேற்கு, ஓக. 13

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தினரால் இன்றுஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வறுமைக்கோட்டுக்குக் கீழ்வாழும் 30 குடும்பங்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

சுதுமலை ஜி. ரி. எம். எஸ். பாடசாலையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன் சி. கேசவராஜனும்சிறப்புவிருந்தினராக லயன் ஜோன் அன்ரனி சகாயராஜ் பெர்ணாண்டோவும் கலந்து கொள்வர். (க-185)

* * *

வலி. தென்மேற்கு, ஓக. 13

நவாலி சென். பீற்றர்ஸ் சனசமூக நிலைய புதிய கட்டடம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வலி. தென்மேற்கு பிரதேச சபைத் தலைவரும், மானிப்பாய் ஈ.பி டி பி கட்சி அமைப்பாளருமான வெலிச்சோர் அன்ரன் ஜோன்சனால் திறந்து வைக்கப்படும். (க-185)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 13

நவாலி — மானிப்பாய் தம்பன்மாரி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அடியார்கள், உபயகாரர், நலன்விரும்பிகள் ஆகியோரை இந்த நிகழ்வுக்கு சமுகம் தருமாறு ஆலய பரிபாலனர் கேட்டுள்ளார். (க)

## நாளை நடப்பவை!

யாழ்ப்பாணம், ஓக 13

கொக்குவில் லயன்ஸ் கழகமும், தீவக லயன்ஸ் கழகமும் இணைந்து தீவகத்தில் நாளை திங்கட்கிழமை மருத்துவ முகாம் ஒன்றினை நடத்தவுள்ளன.

புளியங்கூடல் நெசவுசாலை மண்டபத்தில் முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை நடைபெறும் இந்த முகாமில் கண், இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் குழந்தைகளுக்கான பரிசோதனை, பொதுவைத்தியப் பரிசோதனை என்பன இடம் பெறவுள்ளன.

கண்பரிசோதனையை எம். எஸ். பெர்னாண்டோ நிறுவனத்தினரும் ஏனைய மருத்துவப் பரிசோதனைகளை லயன்ஸ் கழக வைத்தியர்களும் யாழ். மருத்துவபீட மாணவர்களும் இணைந்து மேற்கொள்வர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட சுகாதாரப் பிரிவுத் தலைவர் லயன் டாக்டர்கே.ரி சிவபாதமும் சிறப்பு விருந்தினர்களாக லயன் டாக்டர் தியாகராஜா, லயன் பொ. கமலநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

இம்முகாமில் வேலணை வாழ்மக்களைக்கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது (க)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 13

யாழ். மாவட்டக் கூட்டுறவுத் திணைக்களத்தின் உத்தியோகப் பற்றற்ற கணக்காய்வாளர் சங்க அங்கத்தவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் யாழ். மணிக்கூண்டு வீதியில் அமைந்துள்ள கூட்டுறவுச் சபை முன்றிலில் சங்க அங்கத்தவர்களை ஒன்று கூடுமாறு செயலாளர் கேட்டுள்ளார். (க)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 13

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் மாதாந்தக் கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை முற்பகல் 9-30 மணிக்கு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறும்.

'இடப்பெயர்வும் மனித உறவுகளும்' எனும் தலைப்பில் கலந்துரையாடல் இடம் பெறும். கவிஞர் இ. முருகையன் தொடக்கவுரை நிகழ்த்துவார். (க)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 13

அகில இலங்கைத் திருமுறை மன்றமும் யாழ்ப்பாணம் சத்திரத்து ஸ்ரீ ஞானவைரவர் ஆலய பரிபாலன சபையும் இணைந்து இந்த ஆலயத்தில் திருமுறைப் பெருவிழாவையும் திருவாதிரை தழுவிய திருமுறைப் பாடல்கள் நூல் வெளியீட்டினையும் நாளை திங்கட்கிழமை நடத்தவுள்ளன.

திருமுறை மன்றத் தலைவர் வ. பேரின்பநாயகம் தலைமையில் அன்று காலை 6 மணிக்கு அகத்தியர் தேவாரத்திரட்டுமுற்றோதலும்முற்பகல் 9 மணிக்கு திருமுறைச் சுவடிகள் சோடசோபசார பூசையுடன் வீதி வலம்வருதல் என்பனவும் இடம்பெறவுள்ளன.

முற்பகல் 10 மணிக்கு பண்ணிசை மாமணி நா.வீ மு நவரத்தினத்தால் திருவாதிரை தழுவிய திருமுறைப் பாடல்கள் நூல் வெளியிடப்பட்டு அவராலே பண்ணிசைக்கப்படும். தொடர்ந்து யாழ். சைவ பரிபாலன சபை நடத்திய பண்ணிசைத் தேர்வில் முதலிடம் வகித்து தங்கப் பதக்கம் பெற்ற செல்வி பவனுஜா தெய்வேந்திரன் கௌரவிக்கப்படுவார். அத்துடன் இரா. செல்வவடிவேலுவின் சிறப்புரையும் இடம் பெறவுள்ளன. (க)

## உதயன்

# செயற்கைப் பொருள்; விழிப்புணர்வு தேவை

வெளிநாடுகளில் - குறிப்பாக மேற்கு நாடுகளில் - சூழலைப்பாது காக்கும், அதனை மாசுபடுத்தாமல் பாதுகாக்கும் தீவிரமான நடவடிக் கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விஞ்ஞானமும் அதன் விளைவுக ளான கைத்தொழில் மயம் மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சிகளும் பூமி யின் சூழல் மாசுபடுவதற்கு மூலகா ரணங்கள். இவற்றால் நன்மைய டைந்த மேற்கு நாடுகள் தாம் செய்த வினைக்கு பிராயச்சித்தம் செய்யும் வகையில் சூழலை மாசுப டுத்தக்கூடாது என்பதில் இப்போது பெரும் அக்கறை காட்டுகின்றன.

அதற்குச் சிறியதோர் உதார ணம்-

பொருள்களைப் பொதி செய்வ தற்குப் பயன்படுத்தப்படும் பிளாஸ் ரிக், பொலிமர், பொலித்தீன் பைக ளைப் பாவனையாளர்களிடமிருந்து திரும்பப் பெறுவதற்கான வசதிகள் இலகுவாக்கப்பட்டுள்ளன. அவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனங்க ளும், வியாபார நிறுவனங்களும் அதற்கான வசதிகளைச் செய்வதில் கரிசனை காட்டுகின்றன. குறிப்பிட்ட பைகளை வீசாமல், சூழலைப் பாது காக்கும் பொருட்டு, இதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் அவற் றைச் சேர்க்குமாறு பாவனையாள ருக்கு வேண்டுகோள் விடுக்கும் வாசகங்கள் பைகளில் கவர்ச்சிகர மாக அச்சிடப்படுகின்றன.

பிளாஸ்ரிக், பொலிமர் உற்பத்தி களைக் குறைக்கும் விதத்தில் அவற்றை மீள் வட்டத்தில் தயாரிப் பதற்காகவே பொதி செய்யப் பயன் படும் பைகள் திரும்பப் பெறப்படுகின் றன.

ஆனால் எமது பிரதேசங்களில் பிளாஸ்ரிக், பொலிமர் பொருள்களின் பாதகமான விளைவுகளை மக்கள் இன்னும் உணர்ந்ததாக இல்லை. அப்பொருள்களை புதுமையானவை என்ற எண்ணத்தோடு தாராளமாகப் பயன்படுத்துகிறார்கள். பொலித்தீ னில் உணவுப் பொருள்களைச் சுடச்சுடக் கட்டி பலமணி நேரம் கழித்துச் சாப்பிடுகிறார்கள். குறிப் பிட்ட பொலித்தீன் பைகளைக் கண்டபடி வீசுகிறார்கள். உணவு கிடைக்காத வேளைகளில் கால் நடைகள் அவற்றை உண்பதற்கு வாய்ப்பு உண்டு என்பதனை நிலைப்பதில்லை.

தமது கால்நடைகள் "கொழுப் பாக"க் காணப்பட்டால் கூடிய விலை விற்கலாம் என்பதற்காக சிலர் அவற்றுக்குப் பொலித்தீன் பைக ளைப் பலவந்தமாக ஊட்டுவதும் உண்டு. ஆனால் இந்தப் பைகள் மிருகங்களுக்கு நஞ்சூட்டி அவற் றைக் கொல்கின்றன என்பதை திரு கோணமலையில் இறந்த மான்களின் பிரேத பரிசோதனையின் போது டாக்டர்கள் கண்டறிந்துள்ளனர்.

பொலிமர், பொலித்தீன் பைகள் வெப்பமான வேளைகளில் அறைக் குள் வைக்கப்படும் போது, அவற் றில் இருந்து கசியும் நச்சு வாயுக்க ளால் குழந்தைகள் மூச்சுத் திணறும் அபாயமும் உண்டு.

இத்தகைய பாதிப்புகளைத் தெரிந்தும் தெரியாமலும் மேற்படி வகைப் பைகளை எமது பிரதேச மக்கள் கண்ணை மூடிக்கொண்டு பாவிக்கிறார்கள். அவை குப்பைக ளாகி பின்னர் வயல்களுக்கு பசளை யாகச் செல்வதால் பயிர்ச் செய்கை யும் பாதிக்கப்படுகிறது. குப்பையில் பொலித்தீன் பைகள் அதிகம் இருப்ப தால் அவை உக்கிப் பசளையாவ தில்லை. அதனால் குப்பையும் பசளை என்ற தனது தகுதியை இழக்கிறது!

இவ்வாறு பல வகைகளாலும் பாதிப்புத் தரும் செயற்கைப் பொருள்களைத் தவிர்த்து இயற் கைப் பொருள்களைப் பயன்படுத்தப் பழக வேண்டும்.

புதியவை, ஆடம்பரமானவை என்று நினைத்து மக்களுக்கும் சூழ லுக்கும் பாதிப்புத் தரும் பொருள் களைப் பயன்படுத்தும் "நாகரிகத்" தைக் கைவிட வேண்டும்.

காடுகளை, மரங்களை வெட் டித் தறித்து மக்கள் தமக்குத் தாமே கேடு விளைவித்திருப்பதை இப் போது அனுபவிக்கிறோம். மழை குறைந்து எப்போதுமில்லாதவாறு வெப்பநிலை எமது பிரதேசத்தில் அதிகரித்துள்ளது.

பொலித்தீன் பாவனை அதனை விடவும் கொடுங்கேடு விளைவிக்க லாம். அவ்வாறு நிகழாமல் தடுப்ப தற்குத் தேவையான விழிப்புணர்வு இப்போதே பிறக்கவேண்டும்.

# அன்பின் வாழ்வே நற்கருணை வாழ்வின் வெளிப்பாடாகும்

மூன்றாவது மிலேனியத்துக்குள் உட்புகத் துடிக்கும் இன்றைய மானிட சமுதாயம் கடந்த காலத் தின் பல்வேறு அனுபவங்களுடனும் நிகழ்காலத்தில் பின்னிப்பிணைந் துள்ள எண்ணிலடங்காத சிக்கல்க ளுடனும் எதிர்காலத்தை ஒட்டிய வெவ்வேறு வகையான எதிர்பார்ப் புகளுடனும் காலடி எடுத்துவைக் கின்றது.

## ஞாயிறு நற்பிரசாதம்

ஒருபுறம் விஞ்ஞான தொழில் நுட்ப பொருளாதார தொலைத் தொடர்பு முன்னேற்றங்கள் மனித சமுதாயத்தை வியப்பில் ஆழ்த்த, மறுபுறம் அரசியல், அதிகார, ஆணவ, சுயநலங்கள், போட்டிகள் காரணமாக எழுந்த போர் நிலைமை களும் ஆக்கிரமிப்புக்களும் புதை குழிகளும் பட்டினிச் சாவும் வறுமை, பணவீக்கம், சாதிய வேறுபாடுகளும் மனிதனை சாக்கடைக்குள் தள்ளு கின்றன.

**யுபிலி ஆண்டுக்கு ஆயத்தம்**

கடந்த மூன்று வருட ஆயத்தங் களையும் பின்னோக்கிப் பார்க்கின்ற வேளையில் -

'இயேசுக் கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்' எனவும் அர்ச்சித்து புனிதப்படுத்தும் தூய ஆவியே வாரும். எனவும் 'எழுந்து என் தந்தையிடம் செல்வேன்' என வும் மூன்று மையக் கருத்தைக் கொண்டு திருத்துவக் குழும வாழ்வு பற்றிச் சிந்தித்துப் பல்வேறு ஆயத் தங்களைச் செய்தோம். அதாவது அயலவருடனும் இறைவனுடனும் நாம் ஒப்புரவாகி தந்தையை நோக் கிய எமது ஆன்மீகப் பயணத்தில் எமது விசுவாசத்தைப் புதுப்பிக்க வேண்டும் என இம்மூன்று ஆண்டு கால ஆயத்த செயற்பாடுகளும் எமக்கு அறிவுறுத்தின.

**அருள்திரு சி.ஜே.அன்ரனிபாலா**

இரண்டாயிரம் திருவழிபாட்டு ஆண்டை ஆரம்பிக்கும் எமக்கு இவ்வாண்டின் மையக் கருத்தாக 'இயேசுக் கிறிஸ்து உலகின் ஒரே இரட்சகர் எமது புதிய வாழ்வின் அப்பம்' என்னும் கருப்பொருள் பரி சுத்த திருத்தந்தையினால் தரப்பட் டுள்ளது. நற்கருணை எமது வாழ் வின் ஊற்றும் மையமும் உறைவிட மும் ஆகும் என நாம் சிந்தித்து அதன் வழி செயலாற்ற அழைக்கப் படுகின்றோம்.

(நன்றி : பாதுகாவலன்)

# கிராமசேவையாளர் உட்பட மூவர் ஷெல்லினால் காயம்

திருகோணமலை,ஓக.13

மூதூர் கட்டைப்பறிச்சான் முகா மில் இருந்து வியாழன் காலை 6.40 மணியளவில் மேற்கொள்ளப் பட்ட ஷெல் தாக்குதலில் கிராம சேவையாளர் உட்பட மூவர் காயம டைந்தனர்.

கடற்கரைச்சேனை என்னும் இடத்தில் இந்த ஷெல் வீழ்ந்து வெடித்தது.

கிராமசேவையாளரான அழகு சுந்தரம் மற்றும் சுதாகரன் (வயது 17), ஜெகதீஸ்வரி(வயது10) ஆகி யோரே காயமடைந்தனர். (இ-5-150)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவிப் பொருள்கள்

இடம்பெயர்ந்து வடமராட்சிப் பகுதியில் தங்கியிருக்கும் தென்ம ராட்சி, பளை, மருதங்கேணியைச் சேர்ந்த மக்களுக்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபா பெறு மதியான பொருள்கள் வழங்கப்பட் டன.

ஈ.பி.டி.பியைச் சேர்ந்த மேற்படி பிரதேச சபையின் தலைவர் வல்லி புரம் நடராஜா தலைமையில் பிர தேச சபை அதிகாரிகள் இடம் பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் இடங்களுக்கு நேரில் சென்று இப் பொருள்களை வழங்கினர்.

சமையல் பாத்திரங்கள், வாளி கள், பாய் போன்ற பொருள்களே வழங்கப்பட்டன.

இந்தப் பொருள்கள் வழங்கும் வைபவத்தில் தென்மராட்சி ஈ.பி. டி.பி.அமைப்பாளர் சாள்ஸ் மற்றும் கட்சியின் யாழ்.அலுவலக தொடர் பாளர் சிறீ ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-5)

# அலுவலகத்தில் சந்திக்கலாம்

வட்டுக்கோட்டை சங்கரத்தைச் சந்தியில் உள்ள கால்நடை வைத் திய அதிகாரி பணிமனையில் கால் நடை வைத்தியரை விடுமுறை தவிர்ந்த ஏனைய வார நாள்களில் காலை 9 மணி தொடக்கம் நண் பகல் 12 மணிவரை அலுவலகத் தில் நேரில் சந்திக்கலாம் என கால் நடை வைத்திய அதிகாரி டாக்டர் க.இரகுநாதன் தெரிவித்துள்ளார். (ஐ-30)

# சங்கக் கிளைகள் திறப்பு

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இரண்டு கிளைகள் மீண் டும் திறக்கப்பட்டுள்ளன.

நல்லூரில் உள்ள 12ஆம் இலக் கக் கிளையும் மற்றும் நாவாந்துறை யில் அமைந்திருக்கும் முதலாம் இலக்கக் கிளையுமே மீண்டும் திறக் கப்பட்டுள்ளன.

பாவனையாளர்களின் வசதி கரு தியே இந்த இரண்டு சங்கக் கிளை களும் மீளத் திறக்கப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் தெரிவித்தார். (ஐ-17)

# பெரும்பான்மை பெறும் நிலை தற்போதைக்கு இல்லை

## அமைச்சர் ஜெயரத்தின கூறுகிறார்

அரசமைப்புச் சட்ட நகலை நாடாளுமன்றத்தில் விவாதித்து அதற்குப் பெரும்பான்மை பெறக் கூடிய நிலை தற்போதைக்கு இல்லை என்று பொதுமக்கள் ஐக் கிய முன்னணியின் செயலாளரும், அமைச்சருமான டி.எம்.ஜயரத்தின தெரிவித்தார்.

இந்த நகல் கடந்தவாரம் நாடா ளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு மூன்றில் இரண்டு பெரும் பான்மையைப் பெற முடியாத நிலை யில் அதன் மீதான விவாதம் கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட் டது. மீண்டும் அதை விவாதித்து பெரும்பான்மையைப் பெறக்கூடிய நிலை தற்போதைக்கு இல்லை என்று அவர் கூறினார்.

தேர்தல் முடிந்த பின்பே அதை மீண்டும் சபையில் சமர்ப்பிக்க நட வடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் சொன்னார். (இ-3-4)

**உதயவாக்கு**

சொல்வன்மைக்கு மனத் தெளிவு அவசியம். எந்த விஷ யத்தின் நுட்பத்தையும் முழுத் திறமையோடு அலசி அறிந்து, அரிய பகுத்தறிவோடு பிறருக்கு உண்மையை விளக்கும் ஆற் றல் வேண்டும்.

- எமர்சன்.

**நாளை**

**ஆடி 30**

**திங்கட்கிழமை**

*திதி:* சதுர்த்தசி
முற்பகல் 9.05 வரை
*நட்சத்திரம்:* திருவோணம்
பின்இரவு 12.51 வரை
பூரணை விரதம்
*சுபநேரம்:* 12.05 - 1.35
*ராகுகாலம்:* 7.35 - 9.05
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# ஓரணியில் நிற்போம்!

புலிகளுக்கு எதிரான யுத்தம், முன் எப்போதும் இல்லாதவாறு தீவிரப் படுத்தப்படும் –

பாதுகாப்பு இணை அமைச்சர் அனுருத்த ரத்வத்தை நாடாளுமன்றத் தில் ஆகக் கடைசியாகப் பேசிய பேச்சின் சாராம்சம் இது!

பயங்கரவாதத்தை அடக்குவதற்கு நான் தயங்கமாட்டேன்; அதை யுத்தத்தின் மூலமே ஒழிக்க முடியும்; ஒழிக்க வேண்டும் –

பதவி ஏற்ற கையுடன் இப்படிப் பேசியிருப்பவர் புதிய பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கா!

பொறுப்பு வாய்ந்த இந்த இருவரினதும் பேச்சுக்கள், தமிழ் மக்களின் விசேட கரிசனைக்கும் ஆழ்ந்த சிந்தனைக்கும் உரியவை.

போர்ச் செலவுக்கென மேலும் பல கோடி ரூபாய்களைச் சமீபத்தில் நாடாளுமன்றம் ஒதுக்கியிருப்பதையும் –

நட்புறவு விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ், அமெரிக்கப் படையின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த ஆலோசகர்கள், இலங்கைப் படையினரின் போரிடும் ஆற்றலை அதிகரிக்கச் செய்யும் வகையில் அவர்களுக்கு விசேட பயிற்சி அளித்து வருவதையும் –

நவீன போர் விமானங்களும் அதிக சக்திவாய்ந்த ஆயுதங்களும் பல்வேறு நாடுகளிலிருந்து இங்கு வந்துகொண்டிருப்பதையும் –

அரசமைப்புச் சீர்திருத்தம் வேண்டாம்; யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தி வெற்றி ஈட்டுங்கள் எனத் தம்மைச் சந்தித்த படைத்தளபதிகளுக்கு மகாநாயக்கர்கள் ஆசி வழங்கியதையும் –

புலிகளை ஒழிப்பதுதான் இலங்கையிலுள்ள அத்தனை பிரச்சினை களுக்குமான ஒரே தீர்வு என, அரசமைப்புத் திருத்த நகலை எதிர்த்த வேளையிலும், இப்போது தொடர்ந்தும் சிங்கள உறுமய, வீரவிதான, பூமிபுத்திர போன்ற அமைப்புக்கள் உரத்தகுரலில் முழங்கி வருவதையும்-

இணைத்துப் பார்க்கும்போது, இந்த இருவரின் பேச்சுக்களை, தேர்தல் வெற்றியை மட்டும் உள்நோக்கமாகக் கொண்ட தந்திரோபாயமாக - வெறும் 'வெருட்டு'க்களாகக் கொள்ள முடியாது; அட்டாடிக் கொள்வதும் தவறு!

ஏனெனில் --

## மணிமண்டபம்

சந்தர்ப்பங்களின் நிர்ப்பந்தங்களினால், வேறு எத்தனையோ விஷயம் சம்பந்தமாகத் தான் கொடுத்த வாக்குறுதிகளையும், விடுத்த சவால் களையும் சௌகரியமாக மறந்து - புறக்கணித்து - மீறி நடந்த அரசு, போர் சம்பந்தமான இத்தகைய வாக்குறுதிகளைக் காப்பாற்றிக் கௌர வித்தே வந்துள்ளது!

ஆகவே –

அரசு வெற்றி அடையுமா அல்லது தோல்வியையே தழுவுமா என்பது ஒரு புறமிருக்க –

போர் மீண்டும் தொடங்கும்; தொடரும் என்பதே உண்மை!

இந்த உண்மையைத் தமிழ் மக்கள் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும்; அதேவேளையில் இதனுடன் பிரிக்கமுடியாதபடி கலந்து, தவிர்க்க முடியாதபடி பிணைந்திருக்கின்ற இன்னொன்றைப் பற்றியும் சிந்திக்கவேண்டும் –

காற்றடிக்கும்போது முள்மரம் வாழை மரத்திற் சாய்ந்தாலென்ன, வாழை மரம் முள்மரத்திற் சாய்ந்தாலென்ன --

கிழிந்து போவது வாழையிலைதான்!

யார் போரைத் தொடக்கினாலும் - யார் அதனைத் தொடர்ந்தாலும் பாதிக்கப்படுபவர்கள் - மிக மோசமாகப் பாதிக்கப்படுபவர்கள் தமிழ்ப் பொதுமக்கள் தாம்.

உயிர் இழப்பு, உடல் சிதைப்பு, இடப்பெயர்வு, தடை விதிப்பு - எனத் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் கஷ்டங்களும் நஷ்டங்களுக்கும் ஆளாகப் போகின்றவர்கள் அப்பாவித் தமிழர்கள்தாம்!

இன்னுமொன்று –

போர் நடக்கும் வேளையில், பொதுத் தேர்தலும் நடக்குமாம்!

அதாவது --

போர்க்களத்தில் ஒரு "தேர்தல்" நடக்கப் போகின்றது!

தேர்தல் களத்தில் ஒரு "போர்" நடக்கப் போகின்றது!

இந்த நிலைமையில் தமிழ்த் தலைவர்கள் என்ன செய்யப் போகின் றார்கள்?

தமிழ் மக்களை வாட்டும் கேள்வி மட்டுமல்ல, உலக நாடுகளின் ஆர்வத்தைக் கிளறிக் கொண்டிருக்கும் விஷயமும் இதுதான்!

தேர்தலிலும் அதன் இன்றியமையாத அம்சமாக மாறிவிட்ட 'தில்லு முல்லு'களிலும் ஈடுபட்டு, ஜனநாயக வழியில் தாம் வைத்திருக்கும் மதிப்பையும் நம்பிக்கையையும் துவம்சமாக்கப்படுத்தப் போகின்றார்களா?

அப்பாவிப் பொதுமக்கள் கைது செய்யப்படும்போது - காணாமல் போகும் போது - அடித்துச் சித்திரவதை செய்யப்படும்போது - அநியாய மாகக் கொல்லப்படும்போது - சம்பந்தப்பட்டோரை "இனிமேல் இப்படி நடக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்" என 'அன்புடன்' அடிக்கடி கேட்டுக் கொண்டிருக்கப் போகின்றார்களா?

'தமிழ் மக்களின் துயர் துடைப்பதே எங்கள் உயர் இலட்சியம்' எனச் சொல்லிக்கொண்டு, அவர்களின் துயர் நிகழ்ச்சிகளுக்கு அடிப் படையான அநியாயச் சட்டங்களுக்கு ஆதரவாகக் கைதூக்கப் போகின் றார்களா?

அல்லது –

ஒன்றுபட்ட தமிழினத்தின் ஒரே இலட்சியத்தை - தமது பாரம்பரியப் பிரதேசத்தில், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் தன்மானத்துடனும் சமாதானத்துடனும் தம்மைத் தாமே ஆளும் உரிமையுடனும் வாழ வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்தை- வென்றெடுப்பதற்காக ஒரே அணியில் நின்று உண்மையாக உழைக்கப் போகின்றார்களா?

சிங்களத் தலைவர்கள் பிளவுபட்டு நிற்கலாம். அதனால், சிங்கள இனம் பாதிக்கப்படமாட்டாது.

சிறிமாவோ பண்டாரநாயக்காவைக் குற்றவாளியாக்கி, உரிமைகள் பலவற்றைப் பறித்து அவரை 'அரசியல் அநாதை' யாக்கினார் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா. அதனால் சிங்கள இனத்திற்கு எவ்வித நஷ்டமோ இழப்போ ஏற்படவில்லை.

ஐ.தே.க ஆட்சிக்கு வந்தாலும் சரி, பொ.ஐ.முன்னணி ஆட்சிக்கு வந் தாலும் சரி, சிங்கள மக்களுக்குக் கிடைக்க வேண்டிய வசதிகள் வாய்ப்புக்கள், நன்மைகள் கிடைத்தே தீரும்.

ஆனால் –

தமிழ்த் தலைவர்கள் பிளவுபட்டு நின்றால் –

'தாழ்வுற்று, வறுமை மிஞ்சி விடுதலை தவறிக்கெட்டுப் பாழ்பட்டு நிற்கப்' போவது தமிழினம்தான்!

தமிழ் மக்களுக்கு எவ்வித உரிமையும் வழங்கப்படக் கூடாது என்ப தில், தம்மிடையேயுள்ள வேறுபாடுகளை மறந்து, பெரும்பான்மை மக்க ளின் மத்தியிற் செல்வாக்குள்ள பலர் ஒத்த கருத்துடன் குரல் கொடுக்கும் இவ்வேளையில் –

தமிழ்த் தலைவர்கள் தமக்குள்ளே போட்டி போட்டுக்கொண்டு மூலைக் கொருவராக முகத்தைத் திருப்பிக்கொண்டு நின்றால் –

அழியப்போவது "பயங்கரவாதம்" அல்ல; அனைத்துத் தமிழினமும் தான்.

ஆகவே, போட்டியைத் தவிருங்கள்; போராளிகளுடனும் கலந்து பேசுங்கள்; செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டிய முறையிற் செய் யுங்கள்.

ஒன்று நாம் செய்வோம் — அதை
இன்று நாம் செய்வோம்
நன்று நாம் செய்வோம் — இனி
நம்மை நாம் காப்போம்
ஓரணியில் நிற்போம் — அதைப்
பேரணியாய் வளர்ப்போம்

என்பது உங்கள் தாரக மந்திரமாக இருக்கட்டும்!

சித்தன்

# விலங்கு உலகத்தில்

## இலிங்கத்தின் இயற்



ஆஸ்திரேலிய கவூ (COUGH) கன்னி இனவிருத்தி செய்வதை நிறுத்தி, கூட்டிலுள்ள தனது சகோதரர் களுக்குக் காவலிருக்கிறது.



அற்புதமான அழகுபடைத்த கொடுங்கோலன். ஆட்சியுள்ள ஆண் கெலாடா பபூன் (GELADA BABOON) எந்தவிதக் கீழ்ப்படிவின்மையையும் சகிக்காது. அதன் கம்பீரமான தோற்றமும், கொடூர மான பார்வையும், அது பயப்படுத்தி ஆட்சி செய்ய முடியும் என்பதைக்காட்டுகின்றன. அருகில் முதற் பெண்ணும், அதன் குட்டியும், இதற்கு மேல் இவற் றினாலும் நெருங்க முடியாது.



மற்றுமொரு முக்கிய வேலியன் ஆண். ஆட்சியுள்ள ஆண் ஹமட்ஹயாஸ் பபூன் (HAMADRYAS BABOON) ஒரு சண்டியன் (BULLY), ஆயினும் ஹேறத்திலுள்ள சகல பெண்களையும் நெருங்க அதனால் முடியும். பெண்களும் பாதுகாப்புக்கு அதை நம்பியிருப்பவை ஆகும்.



பெண் கொலாடா பபூன்கள் புணர்ச்சிக்கு தமது தயார் நிலையை தமது மார்பிலுள்ள சிவப்பு அடை யாளங்கள் மூலம் புலப்படுத்துகின்றன. வலப்பக்க மாகவுள்ள இந்த ஆணிலும் இத்தகையதொரு அடையாளம் உண்டு. (ஆண்சிங்கம் போல் சடை முடி கொண்டது ஆண்).

இலிங்க நிர்ணயம் ஏற்பட்டதன் பின் கிடைத்த பலாபலன்கள் என்ன? ஆண்வர்க்கம் அட்டகாசம் புரிவதற்காக ஏற்பட்டதுதான் இலிங்க நிர்ணயமா? இத்தகையதொரு தவறை இயற்கை செய்திருக்கமுடியுமா? தவறை நிவர்த்திப்பதற்கு இயற்கையன்னை நடவடிக்கை எடுப்பாளா? இது தொடர்பாக கூர்ப்பின் திசை எங்ஙனம் இருக்கும்? இனவிருத்திக்கு ஆண்வர்க்கம் தேவைதானா? இத்தகைய இன்னோரன்ன வினாக்கள் உங்கள் மனதில் எழுந்திருக்கும். தொடர்ந்து படியுங்கள், சில திடுக்கிடும் தகவல்களும் கிடைக்கும்.

### மக்கியவேலியன் ஆண்கள் (MACHIAVELLIAN MALES)

மக்கியவேலியைப்பற்றி அரசியலில் கேள்விப் பட்டிருப்பீர்கள். ஆனால் இது மனித இனத்திற்கு மட்டும் உரிய குணமல்ல. விலங்கினங்களிலும் உண்டு. பொதுவாக சமூக வாழ்க்கைக்குரிய விலங்கினங்களின் ஆண்களில் - சிங்கம், புலி, கரடி, கொரில்லா, சிம்பன்சி, பபூன், குரங்கினங் கள், மனிதன் போன்றவற்றை உதாரணமாகக் கொள்ளலாம்.

பொதுவாக "நீ என் முதுகைச் சொறி, நான் உன்முதுகைச் சொறிகின்றேன்" என்ற அடிப்படை யில் சமூக வாழ்க்கை அமைந்தாலும், பெரும்பா லும் ஆட்சியுள்ள ஆண் மூர்க்கத்தனமுள்ளதாக விருப்பத்துடன், கூட்டத்திலுள்ள ஏனைய அங்கத் தவர்களை அடிப்பதும், கடிப்பதும், துன்புறுத்து வதும், தண்டனை கொடுப்பதும் போன்ற இன்னோ ரன்ன செயற்பாடுகளே அவற்றின் நாளாந்தத் தொழிலாகும். அனேக பிறைமேற்றுக்களில் (குரங்கு, மனிதக்குரங்கு, மனித இனங்கள்) ஆண் களின் இலிங்கத்திற்குரிய மூர்க்கத்தனம் குறை வாக இருந்தாலும் சில இனக்குரங்குகளிலும் (உ+ம்: தாட்டான் குரங்கு) பபூன்களிலும் இது உச்சம் பெற்றதாய் இருக்கும். பொதுவாக பல பெண்டிரைக் கட்டி மேய்க்கும் ஆண்களில்தான் ஆட்சியுள்ள ஆண்களின் சர்வதிகாரப் போக்கு மிக அதிகமாக இருக்கும். ஆனாலும் பலபெண்டி ரைச் சமாளிப்பது சாதாரணமானதா? பெரும்பா லும் ஆட்சியுள்ள ஆண், விந்தைப் பாய்ச்சாமல், போலிப்புணர்ச்சியில் ஈடுபடும். அதனால், அயலட் டையிலுள்ள ஆண்களுக்கு பெண்களுடன் புணர்வ தற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். "பெரியவர்" கண் டும் காணாததுபோலிருப்பார்; "ஆட்சி என்கை யில், இனவிருத்தி பொது" என்ற நியதி போலும்.

சிம்பன்சிகளைப் பொறுத்தவரை, கிடைக்கும் உணவின் அடிப்டையில்தான் குடும்ப அமைப்பு இருக்கும். பெரும்பாலும் ஒரு குடும்பத்திலுள் ளோர் எல்லோரும் இனத்தவர்களாக இருப்பார் கள். குட்டிகள் பருவமடையும்போது ஆண்கள் பெற்றோருடன் இருக்க, பெண்கள் வேறு குடும் பங்களை நாடிச்சேரும். இங்ஙனம் காட்டின் சகல பகுதிகளையும் அடையவாய்ப்புக் கிடைக்கும். புணர்ச்சியின்போது திடகாத்திரமான ஆண்களைத் தான் சேரவிடும். இங்ஙனம் கூட்டத்தின் திறனும் பேணப்படும்.

### நினைத்ததைப் பெற....

விருப்பத்தைக்காட்டி ஆணைக் கவர்ந்து நினைத்ததைப் பெற்றுக்கொள்ளும் முறையும் உள்ளது.

பொதுவாகக் குரங்கினத்தில் பெண்கள் இலிங் கத்தை விலைபேசும். கவர்ச்சியைக்காட்டி, ஆண் களைக்கவர்ந்து, புணரஇடமளித்து, தாம் விரும்பி யதைப்பெற்றுக்கொள்ளும். இது உணவாகவோ, பாதுகாப்பாகவோ, ஏதாவது விரும்பியதொன் றாகவோ இருக்கும். ஆட்சியுள்ள ஆணைப் "பிளீஸ்" பண்ணினால், கூட்டத்தில் உள்ள பெண் களில் முதற்பெண் என்ற உரிமைகிடைக்கும். ஓய்வின் போதும் நகரும்போதும் ஆட்சியுள்ள ஆணை அண்டியிருப்பதற்கு வாய்புக்கிடைக்கும். (இது நிரந்தரம் என்று கொள்ளமுடியாது. ஏனைய பெண்கள் என்ன சளைத்தவர்களா?)

### சமாதானத்தை அடைய....

கூட்டத்தில் ஆணின் அகோதரத்தைக் குறைத்து சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இலிங்கத்தை கருவியாகக்கொள்ளும் நடை முறையும் உண்டு. பலத்தைப் பொறுத்தவரை பெண்கள் ஆண்களுக்குச் சளைத்தவர்களே. ஆயி னும் பெண்களிடம் ஒரு சிறந்த கருவியுண்டு. அதுதான இலிங்கம். பெண்ணின் பலம் அதுதான். ஆதனைக்காட்டி ஆண்களை அடக்குவதுண்டு. சிங்கராசாவின் ஆக்ரோஷத்தை அடக்குவதற்கு இது பெரிதும் பயன்படும்.

### பெண்ணாட்சிக்குரிய மோல் எலிகள் (MATRIARCHAC MOLE RATS)

மோல் எலிகளில் உள்ளது அஸ்லி இராச் சியம். இவை நிலத்தின் கீழ் வாழுகின்ற, நிர்வா ணமான (மயிரற்ற), குருடான எலிகள். ஒரு கூட் டத்தில் பல எலிகள் இருக்கும். ஓர் எலி ஆட்சியுள்ள பெண்ணாக (இராணியாக) இருக்கும். பல பெண்களிருந்தாலும் இனவிருத்தி செய்யும் வாய்ப்பு அவற்றிற்குக் கிடைப்பதில்லை. விரும் பிய ஆண்களுடன் புணர்வதும், இனவிருத்தி செய் வதும் இராணியின் உரிமை.

### சமூகவாழ்க்கையும், ஒற்றுமையும், பிரச்சினைகளும்

கருங்குளவிகளும், தேனீக்களும் மிக ஒற்று மையான சமூகவாழ்க்கையை நடத்தும். இனவி ருத்தி செய்யும் உரிமை சமூகத்தில் முழு இலிங்க வளர்ச்சிபெற்ற ஒரேயொரு பெண்ணுக்கு - அதாவது இராணிக்கு - மாத்திரம் உண்டு. ஒரு சில ஆண்களுமிருக்கும். புதிதாகத்தோன்றும் இராணியை வளம்படுத்துவதே இவற்றின் தொழில்; இராணியின் வாழ்க்கையில் ஒரு தட வைதான் இது நிகழும். ஏனையவையெல்லாம் மலட்டுப்பெண்கள். சமூகத்திலுள்ள சகல தொழில் களையும் இவையே செய்யும். கூட்டில் ஒரே தடவையில் பல குட்டிராணிகள வளரும் படிநிலை களிருக்கும். முதலில் தோன்றும் இராணி ஏனை யவற்றையெல்லாம் கொன்றுவிடும். ஒரே தட வையில் இரண்டு தோன்றினால் பதவிப்போர் நிகழும். வென்றது புதிய இராணி. இது வளம் படுத்தப்பட்ட பின் கூட்டின் புதிய ராணியாகச் செயற்படும். பழைய இராணி ஒரு தொகுதி ஈக் களுடன் குடிபெயர்ந்து சென்று புதிய கூட்டை அமைத்து வாழ்க்கையைத் தொடரும்.

### இலிங்க முக்கியத்துவம்

பல அங்கியினங்களில் இலிங்க முக்கியத் துவம் சந்தர்பத்திற்கும் சூழ்நிலைக்குமேற்ப மாறுபடும். சில சந்தர்ப்பங்களில் ஆண் எச்சங் களுக்கும் சில சமயங்களில் பெண் எச்சங்களுக் கும் முக்கியத்துவம் கொடுக்கப்படும். இது மனித சமுதாயங்களுக்கும் பொருந்தும். கழுதைப் புலி (HYENA)யைப் பொறுத்தவரை உணவு போதிய அளவுகிடைக்கிற காலங்களில் பெண் எச்சங்கள் கூடிய எண்ணிக்கையில் பிறக்கும். கழுதைப் புலிகளில் ஆண்களை இனங்காண்பது சுலபம். அவற்றில் இலிங்க உறுப்புக்கள் துலக்கமாக இருக்கும். ஆனால் பெண்களை இனங்காண்பது சற்றே கடினமான விடயம்; காரணம் அவற்றின் பெண் குறிக்கு கீழே ஒரு போலி விதைப்பை தொங்கிக்கொண்டிருக்கும். மேலும் பெண்குறி (CLITORIS - இது உண்மையில் ஒடுக்கப்பட்ட ஆண்குறி) நெடியதாகவிருப்பதுடன் ஆண்குறி போல தொங்கிக்கொண்டிருக்கும். மேலும் பிறபெண்களைச் சந்திக்குமிடத்து தனது மேலாட் சியை நிறுவ பெண்ணினால் பெண்குறியை ஆண் குறியைப் போல நிமிர்த்த முடியும். பெண்களி டையே ஆட்சி அந்தஸ்த்தை (DOMINANCE) நிறுவ இந்த ஏற்பாடு.

### ஒத்துழைப்பு


சில அங்கிகளில், ஆண்பெண் முக்கியத்து வம் பாராது, இனமேம்பாட்டிற்காக சகலதும் ஒன்று சேர்ந்து உழைக்கும். சமூகமாக வாழும் சில அங்கியினங்களில்தான் இது காணப்படும். உதார ணமாக சில இன மரங்கொத்திகள்.




கொபிலியா கோப்பில் பொட்டுக்கள் (KOPILIA COPEPODS) இலிங்க ஈருவுடைமை (SEXUAL DIMORPHISM) மிகைப்படுத்தப்பட்டுள் ளது; இடது புறமுள்ளது பெண் வகைக்குரிய கோப்பிப் பொட்டுப் போலவே உள்ளது; வலப்புற முள்ளது ஆண். முற்றிலும் வேறுபட்ட தேற்றத்தை உடயதாக உள்ளது.

### குஞ்சுகளுக்கு பாதுகாப்பு தரும் கன்னிப் பெண்கள்

ஆஸ்திரேலியப் பற்றைக்காடுகளில் வதியும் கவூ (CHOUGH) பறவைகளுக்கு இனவிருத்தி



ஒரு குட்டி பபூன் தனது அண்ணனின் முதுகில் சவாரி செய்கின்றது. குட்டியின் தராதரம் கூட் டத்தில் தாயின் தராதரத்திலும், அண்ணன் மாரை வளைப்பதிலும் குட்டியின் கெட்டித்தனத் திலும் தங்கி இருக்கும்.



ஒபிலியா சமுதாயம். உ...
ஐதரா போன்ற அமை...
தொடர்புடையது; குண்டா...
இலிங்கமில் முறையில் மெ...
றுவிக்கும். சமுதாயம் கிளை...
மூலம், புதிய ஐதராவுரு...
கும். இது இலிங்கமில் ச...

செய்வது பெரும்பாடு. கு...
கொடுப்பதற்கு ஆணும் பெ...
அலையவேண்டியிருக்கும். ...
பல, விருத்திக்குரிய காலங்...
ஈடுபடாது, கூட்டிலிருக்கும் ...
கைகளுக்கும் பாதுகாவலர...

பபூன்களில், பெரிய சகோ...
மாரை முதுகில் சவாரிசெய...
குடும்பத்தில் தாயின் அந்...
இது அமையும். அத்துடன் ...
மாரைத் தாஜா செய்யும் ...
இதுதங்கியிருக்கும்.

### பொனோபோஸ் ... (BONOBOS CHI...

இவை அறுபதுவருடங்க...
கண்டுபிடிக்கப்பட்டன. முன்ன...
சிம்பன்சி என அழைக்க...
ஒழுங்கற்ற (EROTIC) இன...
ணம். ஓரினச்சேர்க்கை (HO...
பல்லினச்சேர்க்கை (HET...
என்று சகல வகைகளிலு...
ஆணும், பெண்ணும் (பெ...
சேர்க்கையிலும், ஆண் - ...
சேர்க்கையிலும் ஈடுபடும். ...
லும் (SELF ABUSE) ஈடு...
னத்தில் மனிதனுக்கு மிக...
சிம்பன்சி என்பது குறிப்பி...

### பபூன்க...

பபூன்கள் இனக்கலப்...
விளம்பரம் செய்யும். ஜெலா...
BABOON) அல்லது குருதி...
(BLEEDING HEART BA...
ஆண் பெண் இரண்டிலும்...
குடுவை வடிவத்தில் (HOU...
நிர்வாணமான தோலுண்டு ...
அதன் மாதவிடாய்ச் சக்...
தடித்து, ஏற்ற காலத்தை ...
தும். அதாவது ஆண்களை...
உதவும். இவ்வியல்புதான்...
மனிதரில் ஆண்களுக்கு, ...
தில் கவர்ச்சியை ஏற்படுத்...
றார்கள். மேலும், மார்பகக்...
ரிக்க அது திரட்சியடைந்து...
எனக் கருதுகின்றார்கள். ...
லும், பால்கொடுக்கும் தாய்...
தட்டையாகத்தான் இருக்கு...

### ஆண்களினால் ...

உயிரியல் அடிப்படையி...
கருவூட்ட வேண்டிய விந்...
சரி. வேறு என்னதான் ஆண...
பாதுகாப்பிற்கு உதவலாம்; ...
செய்யமுடியாதா? இயற்கை...
சில பரிசோதனைகளைச் ...
வேண்டும், அதனால்தான் ...
கள். (ஆண்களுக்கு தடும...


### இலிங்கம் அவசியம...

கடல் ஒடில்லா நத்தைகள்...
பாலுள்ளவை. தமது முட்டை...

அங்கிகள் ...
ஒவ்வொன்றும்...

# ...தில் பாலினப்போர்கள்

## ...யற்கைச் சரிதம் - VII



...தாயம். உணர்கொம்புகள உடைய,
...ன்ற அமைப்பு, போசனையுடன்
...பது; குண்டாந்தடி போன்றவமைப்பு
...முறையில் மெதுாகாக்களைத் தோற்
...முதாயம் கிளையெறிந்து, அரும்புதல்
... ஐதராவுருக்களைத் தோற்றுவிக்
...லிங்கமில் சந்ததி.

...ரும்பாடு. குஞ்சுகளுக்கு இரை
... ஆணும் பெண்ணும் நெடுந்தூரம்
...யிருக்கும். ஆதனால் கன்னிகள்
...குரிய காலங்களுக்கு விருத்தியில்
...டிலிருக்கும் தம்பிகளுக்கும், தங்
... பாதுகாவலராக இருக்கும்.
... பெரிய சகோதரர்கள் தமது தம்பி
... சவாரிசெய்ய இடமளிப்பதுண்டு.
...தாயின் அந்தஸ்தைப் பொறுத்து
... அத்துடன் குட்டிகளின் தலைமையன்
... செய்யும் கெட்டித்தனத்திலும்
...கும்.

### ...போஸ் சிம்பன்சிகள் (...BOS CHIMPANZEE)

...பதுவருடங்களுக்கு முன்னர்தான்
...டன. முன்னர் பிக்மி (PYGMY)
... அழைக்கப்பட்டன. இவற்றில்
...OTIC) இனச்சேர்க்கை சர்வசாதார
...ர்க்கை (HOMO SEXUALITY)
...கை (HETERO SEXUALITY)
...வகைகளிலும் ஈடுபடும். ஆணும்
...ணும் பெண்ணும் என ஓரினச்
... ஆண் - பெண் என பல்லினச்
... ஈடுபடும். தன்னிச்சை தீர்ப்பதி
...BUSE) ஈடுபடுவதுண்டு. (குரங்கி
...வுக்கு மிகநெருங்கிய உறவினன்
...து குறிப்பிடத்தக்கது).

### ... பபூன்கள்

...இனக்கலப்பிற்குரிய காலத்தை
...யும். ஜெலாடா பபூன் (GELADA
...லது குருதி சிந்தும் இதய பபூன்
...EART BABOON) என்ற பபூனில்
... இரண்டிலும் நெஞ்சில் மணிக்
...ல் (HOUR GLASS SHAPED)
...தாலுண்டு. ஆயினும் பெண்ணில்
...ாயச் சக்கரத்திற்கேற்ப இது
...ாலத்தை ஆண்களுக்கு உணர்த்
... ஆண்களைக்கவர நெஞ்சுத்தோல்
...இயல்புதான் விருத்தியடைந்து,
...களுக்கு, பெண்களின் மார்பகத்
... ஏற்படுத்தியதாகக் கருதுகின்
... மார்பகக் கவர்ச்சியை அதிக
...சியடைந்து முனைப்பாகவுள்ளது
...றார்கள். சகல குரங்கினங்களி
...கும் தாய்கள் உட்பட, மார்பகம்
... இருக்கும்.

### ...னால் என்ன பயன்?

...அழிப்படையில், முட்டைகளைக்
...டிய விந்துகளைத் தருவதுடன்
...தான் ஆன்களின் பயன்? இனப்
...தவலாம்; இதைப் பெண்களால்
... இயற்கையும் இந்த ரீதியில்
...களைச் செய்ய முற்பட்டிருக்க
...ால்தான் போலும் சில மாற்றங்
...க்கு தடுமாற்றம்).

### ...வசியமா? (WHY SEX?)

... நத்தைகள் (SEA SLUGS) இரு
...து முட்டைகளைத் தாமே கருக்

...கள் பலவிதம்
...ன்றும் ஒருவிதம்

கட்ட முடியும். ஆயினும் புணர்ச்சியில் ஈடுபட்டு விந்துக்களைப் பரிமாறிக்கொள்ளும். ஏன் இப்படிச் செய்கின்றன? தற்கருக்கட்டலைக் காட்டிலும் கடந்து கருக்கட்டல், இயல்புகள் கலபடுவதற்கு கூடியவசதிசெய்யும். இயல்புகள் எவ்வளவிற்கு கலபடுகின்றனவோ அவ்வளவிற்கு மாறல்கள் நிகழும், கூர்ப்பிற்கு வழிகோலும்.


### முளைவகையாக்கலும் (CLONING) வாழ்க்கைமுறை மாற்றீடுகளும்

பைசோலியா (PHYSALIA) எனப்படும் போர்த்துக்கேய போர்க்கப்பல் (PORTUGUESE MAN - O - WAR) சமுதாய (COLONIAL) வாழ்க்கைக்குரியது. இதில் ஒரு மிதவையும் மூன்று வகையான விலங்குருக்களும் உண்டு. ஒரு வகை உணவுகொள்ளலுடன் தொடர்புடையவை; ஒரு வகை பாதுகாப்புடன் தொடர்புடையவை; ஒரு வகை இனப்பெருக்கத்துடன் தொடர்புடையவை. - அவை இனப்பெருக்கத்திற்குரியவை. புதிய முளைவகைகளைத் தோற்று விக்கும்.

ஓபீலியா (OBELIA) என்ற கடலங்கியும் சமுதாய வாழ்க்கைக்குரியது. இலிங்கமில் சந்ததி இலிங்கச்சந்ததி என இரண்டு சந்ததிகளையுடையது. ஒரு சந்ததி புதிய சந்ததிகளைத் தோற்றுவித்து கொண்டேயிருக்கும்.

### இரு உலகங்களுக்குரிய பயன்


இலிங்க, இலிங்கமில் உலகங்களாகிய இரண்டையும் திறமையாகக் கையாளும் அங்கி அழுக்கணை (ஏபிட்டு/APHID) ஆகும். இது கருக்கட்டாத முட்டைகளை உடலிலேயே பொரித்து குட்டிகளாக ஈனும். (இவை எப்பொழுதும் பெண்களாகவே இருக்கும் - அதாவது முளைவகை) ; கருக்கட்டிய முட்டைகளையும் இடும். இவை பொரித்து ஆண்களும் பெண்களும் தோன்றும் ; செட்டையுள்ள எச்சங்களையும் தோற்றுவிக்கும்;



கன்னிப்பிறப்பு (VIRGIN BIRTH). ஒரு பச்சை ஈ ஒரு சிறிய பெண்மகவை ஈனுகின்றது. பிறக்கும் போதே இது கர்ப்பிணி(PREGNANT)யாக வுள்ளது. இனக்கலப்பு இல்லாமலே ஒரு தனி ஏபிட்டு (APHID) தனது எச்சங்கள் மூலம் ஒரு தாவரத்தின் மேல் ஆட்ச்சி செய்ய முடியும். (கருக்கட்டாமலே முட்டையிடுதல் கன்னிப்பிறப்பு எனப்படும்)

செட்டையில்லா எச்சங்களையும் தோற்றுவிக்கும்; இனப்பெருக்கத்தைப் பொறுத்தவரை சகலகலா வல்லிகள்.

### ஆணாதிக்கம்



பொனோபோ சிம்பன்சிப் பெண்கள் வாஞ்சையுடன் ஓரினக்கலப்பில் ஈடுபட்டுள்ளன. இங்கு இரண்டு பெண்கள் தமது யோனிகளை உரசி ஆனந்தமடைகின்றன.

இலிங்கமுறையினப்பெருக்கம் தோன்றிய காலத்தில் ஆரம்பத்தில் புணரிகளிடையே வேறுபாடு இருக்கவில்லை. பின் விந்து,முட்டை என்ற வேறுபாடு ஏற்பட்டது. விந்து அடுத்த சந்ததிக்கு வேண்டிய செய்திகளை (DNA) மாத்திரம் கொண்டிருக்கும். முட்டை அடுத்த சந்ததிக்கு வேண்டிய செய்தியுடன், முளையவிருத்திக்கு வேண்டிய உணவைப் போதிய அளவிலும், இழைமணிகள் போன்றவற்றையும் கொண்டிருக்கும். அங்கிகளின் DNA தந்தை வழியாகவும் தாய்வழியாகவும் வரும்; இழைமணிகள் (MITOCHONDRIA) தாய்வழியாக மாத்திரம் வரும்.

இதே போல ஆரம்பத்தில் ஆண், பெண் வேறுபாடு இருக்கவில்லை. பின்னர்தான் தோன்றியது. ஆதாவது இலிங்க ஈருருஉடைமை ஏற்பட்டது. வேறுபாட்டின் அதிகரிப்பினால் ஆண்ஆதிகம் (MALE DOMINANCE) ஏற்பட்டது.

### இலிங்கமும் நோய் எதிர்ப்பும்

உலகில் மனித அழிவுக்கு பெருங்காரணமாகவுள்ளது நுளம்பும் அதனால் பரவும் மலேரியாவும். ஏனைய நோய்கள், போர் அனர்த்தங்கள் ஆகியனவற்றினால் இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கையைக் காட்டிலும் மலேரியாவினால் இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகம். இதற்கும் இயற்கை ஒரு வழியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது. இது இலிங்கத்துடன் தொடர்புடையது. அரிவாள்கல செங்குருதிக்குழியங்கள் (SICKLE CELL R.B.Cs ) தோன்றுவதற்குக் காரணமான செய்தி. இது ஆபிரிக்க மக்களிலும் அவர்தம் வம்சாவளிகளிலும் மாத்திரம் உண்டு. இச்செய்தியை தந்தைவழி, தாய்வழி இரண்டின் மூலமும் சிசுபெற்றால், அது அரிவாள்கல குருதிச் சோகையினால் (SICKLE CELL ANAEMIA) பீடிக்கப்பட்டு இறந்து விடும். தாய்வழி, அல்லது தந்தைவழி மூலம் மாத்திரம் பெற்றுக்கொண்டால், மலேரியாவை எதிர்க்கும் திறன் சிசுவுக்கு இருக்கும்.

உஅகாறி குரங்கு (UAKARI MONKEY) என்ற ஆபிரிக்க குரங்கினத்திலும் குரங்கு மலேரியாவை எதிர்க்கும் இயல்பு சிலதில் உண்டு. நோய் எதிர்ப்பியல்புள்ள ஆண்குரங்குகளின் முகம் குருதி சிவப்பு நிறமாகவிருக்கும். நோய் எதிர்ப்பில்லாதவற்றின் முகம் வெளிறியதாயிருக்கும். நல்ல சிவப்பு முகத்திற்கு இலிங்கக்கவர்ச்சி (SEX APPEAL) அதிகம். கூடுதலாக பெண்களை ஈர்க்கும்.

### இலிங்கப் பிணைப்பிலிருந்து வெளியேற முயற்சிகள்

சில இன அறணைகள் (சவுக்குவால் பல்லிகள் - WHIP - TAILED LIZARDS) இலிங்கப் பிணைப்பிலிருந்து விடுபட்டுவிட்டன. இந்த இனத்தில் ஆண்கள் இல்லை. ஆயினும் பெண்கள், ஏதோவொரு காரணத்திற்காக, மாறி மாறி போலிப்புணர்ச்சியில் ஈடுபடும். ஆணினம் இல்லாது போயும், புணர்ச்சிக்குரிய செய்தி மறையவில்லைப்போலும். இவற்றை அறணை ஓரினக் கலவிப்பெண்கள் (LESBIAN LIZARDS) என்று கொள்ளலாம்.

### அகிம்சை முறை

அர்ப்பணமான - ஆண்கள் இல்லாத - மெய்யான இலிங்கம் :- இனவிருத்திக்குரிய காரணிகள் பெண்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆண்களின் அர்ப்பணிப்பு விந்து மாத்திரமே. அட்டகாசம் புரியாத - அர்ப்பணிப்பு செய்யும் - ஆண்கள் இருந்தால் பெண்களைப் பொறுத்தவரை இலிங்க வாழ்க்கை அமைதியானதாயிருக்கும். இந்தவகையில் பல அங்கிகள் வாழ்கின்றன. சில இனங்களில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. நரைசீல்களை (GREY SEALS)ப் பொறுத்தவரை, ஹேறத்தில் (HAREM) உள்ள பெரிய பெண்கள் ஆட்சியுள்ள ஆணைமுட்டித்தள்ளி, இளசுகளை இளம் ஆண்களுடன் இனங்கலக்க உதவுவதுடன், அகிம்சை முறையான ஒருதார (NON -VIOLENT MONOGAMY) முறையை முன்னெடுப்பதாகத் தெரிகின்றது.

**-குகன்-**

பல இனங்களில், தேவைக்குஏற்ப ஆண் பெண்ணாகவும், பெண் ஆணாகவும் மாறுவதுண்டு. கடற் புழுக்கள், சிப்பிகள் போன்றவற்றில் மாத்திரமல் லாமல் சில இன மீன்களிலும் இந்த இயல்புண்டு.

அதே சமயம் இலிங்க ஈருருவுடைமையும் பெண்களைக்கவர ஆண்கள் மேற்கொள்ளும் இசைவாக்கங்களும் தொடரத்தான் செய்கின்றன. உதாரணமாக சபிறினா (SAPPAIRINA) என்ற கோப்பிபொட் (COPEPOD) வகைவிலங்கில் ஆண் பளபளப்பாக பிரகாசிக்கும். இது பெண்களைக்கவர உதவும்.

மனித இனத்திலும், ஆண்ஆதிக்கம், சீதனக் கொடுமை போன்றவற்றிலிருந்து விடுபட பெண்கள் மாற்றுவழிகளில் ஈடுபடலாம். குளோனிங் முறையில் இனவிருத்தி செய்ய முற்படலாம். ஆண்களின்பாடு திண்டாட்டமாகப்போய்விடும். ஆண்வர்க்கம் நிலைக்கவேண்டுமானால் அவர்களும் குளோனிங்முறையைப் பின்பற்றவேண்டியிருக்கும். ஆயினும் பெரியவீடு வைத்திருப்பதே சந்தேகத்துக்கு இடமாகப்போகும் பொழுது சின்ன வீட்டுக்கு எங்கே போவார்கள்? மனித இனமும் நீண்டவால் பல்லிகள், பொனோபோஸ் சிம்பன்சிகள் போன்றவற்றின் நடத்தையைப் பின்பற்ற வேண்டியிருக்குமோ?

இதைக்குறிப்பிடும்போது ஒரு பழைய நாடகக் கதை ஞாபகத்திற்கு வருகின்றது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் எழுதப்பட்ட கிரேக்க கதை

(10ஆம் பக்கம் பார்க்க)



ஓர் இராணித் தேனீ ஒருவகையான இரசாயனப் பொருளைக் கொடுத்து தனது கன்னி மகள்களை வசீகரித்துத் தனது செல்வாக்கைச் செலுத்த முற்பட்டிருக்கின்றது. இதனைப் பெற குட்டி இராணிகள் வாஞ்சையுடன் முட்டி மோதுகின்றன; சூழவிருந்து தாயை நக்கியும், வாய்க்கு வாய் தொடர்பை ஏற்படுத்தியும் இதனைப்பெறுவதற்கு முயற்சிக்கின்றன.



கழுதைப் புலியின் குட்டி ஆணா, பெண்ணா? இலிங்க நிர்ணயத்தில் சூழலின் தாக்கம் அதிகம். உணவு போதிய அளவில்கிடைக்கின்ற காலங்களில் பெண்களே கூடுதலாக விரும்பப்படும்.



இலிங்கப்புதிர், பெண் கழுதைப்புலியின் இலிங்க உறுப்புக்கள் ஆணினதைப் போலிருக்கும். தனது உயர் மேலாண்மையைக்காட்டுவதற்காக பெண் ஆண்தன்மையை விருத்திசெய்துள்ளது.



பெண் ஓரினக்கலப்புப் பல்லிகள் (LESBIAN LIZARDS). இரண்டு பெண் சவுக்குவால் பல்லிகள் (WHIP - TAILED LIZARDS) ஓரினக்கலப்பில் ஈடுபட்டுள்ளன. ஒன்றையொன்று திருப்திப்படுத்துவதற்காக, இரண்டும் மாறிமாறி 'புணர்ச்சியில்' ஈடுபடும். வளைந்திருப்பது ஆணாகத் தொழிற்படும் பெண்.



ஒரு நிர்வாண நில எலி இராணி (QUEEN NAKED MOLE RAT) தனக்கு எதிரிகளாக வரக்கூடிய பெண்களை மிதித்துத் துவம்சம் செய்கிறது. அதனால் களைப்பு மிகுதியினால் அவற்றிற்குப் பால் உணர்ச்சி அற்றுப் போய்விடும்.



மக்கிய வேலியன் ஆண். ஆதிக்க ஆண் சிம்பன்சி அடக்கப்படாத உக்கிரத்துடன் கூட்டத்தை வெருட்டுகின்றது. அடங்காதவருக்கு அடியோ, உதையோ, கடியோ கிடைக்கும்.

தூரிகை நுண்கலை வளாகம்
வழங்கும்
"துணிகளில் அலங்காரமிடல்"
பயிலுநர்களின் உருவாக்கத்தில்
FABRIC PAINTING SHOW-2000
14, 15 ஒகஸ்ட் 2000
காலை 9 மணி – மாலை 5 மணி
இடம்: தூரிகை வளாகம், ம. ம. வி. வீதி, நெல்லியடி.
அனைவரும் வருக!
(77226) ஆசிரியர், பயிலுநர்கள்.

ஸ்கந்தாவின் வாழ்த்துக்கள்
எமது கல்லூரி மைந்தன்



செல்வன் நாகரத்தினம் மாதவன்
அவர்களின்
மிருதங்கஇசை அரங்கேற்றம் இன்று(13-08-2000) நடைபெறுவது குறித்து எம் இனிய வாழ்த்துக்களையும், ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
(77143) கந்தரோடை, சுன்னாகம்.

## கால்நடைப் பயிற்சி பாடசாலைக்கு மாணவர் அனுமதி

வெலிசற, குண்டசாலை கால்நடை விஞ்ஞானப் பயிற்சி பாடசாலைகளில் அனுமதி பெறுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ உயர்தரத்தில் உயிரியல் விஞ்ஞான பாடங்கள் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இந்த அனுமதிக்காக விண்ணப்பிக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான சகல விவரங்களையும் 'இல.364, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில்' அமைந்துள்ள கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)

## கிராமிய வங்கியில் பணம் மீளளிப்பு

தென்மராட்சி,ஓக.13

மானிப்பாயில் இயங்கும் பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு பணம் மீளளிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் வாடிக்கையாளர்களுக்கு பணம் மீள வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## தொடர்பு கொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.13

பின்வரும் பெயர் விவரங்களை உடையோரை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

★ கனகசபை ஜெகதீஸ்வரி- முதலாம்கட்டை, கச்சாய்வீதி, சாவகச்சேரி.

★ கணபதிப்பிள்ளை சத்தியநாதன்- கச்சாய் தெற்கு, கொடிகாமம்.

★ நாகமணி கணபதிப்பிள்ளை- கேணியடி வீதி, மீசாலை மேற்கு, மீசாலை. (ஐ)

## நேர்முகப் பரீட்சை

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் நடத்தப்படும் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பதவி உயர்வு நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 18ஆம் 19ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சை யாழ்.மாவட்டக் கூட்டுறவுத் திணைக்கள அலுவலகத்தில் இடம்பெறுமென்று திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-17)

உ
அளவெட்டி - நாகேஸ்வரம்
ஸ்ரீ நாகவரதநாராயணர் தேவஸ்தானம்
மஹோற்சவ விஞ்ஞாபனம்
14-08-2000 - 25-08-2000

நாமம் பலசொல்லி நாராயணா வென்று
நாமங்கை யால் தொழுதும் நன்னெஞ்சே – வா மருவி
மண்ணுலக முண்டுமிழ்ந்த வண்டறையும் தண்டுழாய்
கண்ணனையே காண்கநங் கண். – பேயாழ்வார்


மெய்யன்பர்களே!
நிகழும் விக்கிரம வருடம் ஆடி மாதம் 30 ஆம் நாள் (14-08-2000) திங்கட்கிழமை தொடக்கம் ஆவணி மாதம் 9 ஆம் நாள் (25-08-2000) வெள்ளிக்கிழமை வரை மேற்படி உற்சவம் நடைபெறும். அன்பர்கள் அனைவரும் தரிசனை செய்து இஷ்ட சித்திகள் பெறுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

| | | |
|---|---|---|
| கொடியேற்றம்: | 14-08-2000 | திங்கள் முற்பகல் 11.30 மணி |
| தேர் வீதி வலம்: | 23-08-2000 | புதன் முற்பகல் 10.30 மணி |
| உறியடி உற்சவம்: | 23-08-2000 | புதன் பிற்பகல் 5.00 மணி |
| ஸ்ரீ ரங்கநாதர் இலட்சுமி பாதபூசை: | 24-08-2000 | வியாழன் முற்பகல் 9.00 மணி |
| தீர்த்த உற்சவம்: | 24-08-2000 | வியாழன் முற்பகல் 10.30 மணி |
| ஆஞ்சநேயர், வைரவர் அபிஷேகம், பொங்கல: | 25-08-2000 | வெள்ளி முற்பகல் 9.00 மணி |
| திருக்கல்யாணம்: | 25-08-2000 | வெள்ளி பிற்பகல் 2.00 மணி |

நாகேஸ்வரம்,
அளவெட்டி.
பொறுப்புரிமை – பரிபாலன சபை.
(77211)

விளம்பர அனுசரணை:
கல்யாணி கிறீம் கவுஸ்,
73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்



## நீயிருக்க என்ன பயம்?

'நாலரைக்கு' நீயெழும்ப நாடு பூத்திடும் – நல்லை
நாதமணி கேட்க ஊரில் ஞான மோங்கிடும்
காலையுன்னைக் கருவறையில் காண வாழ்வெழும் – உந்தன்
கண்சொரியும் அன்பு எங்கள் கவலை தீர்த்திடும்.

ஈழநிலம் காக்க மண்ணில் நீ இருக்கிறாய் – எங்கள்
இருதயத்தின் ஓசையுள்ளே நீ உறைகிறாய்.
காலன் சுட வந்திடில் நீ கண் சிமிட்டுறாய் – அவன்
கயிறெறிவான்; மயிலிறருள் எம்மைக் காக்கிறாய்.

மண்ணுக்கொரு மாண்பு உண்டு தம்பி; கேளடா – நல்லூர்
மடியில் அருளூற்று உண்டு வந்தருந்தடா
புண்ணியங்கள் கோடி செய்த போதும் என்னடா? – நல்லை
பொன்மணலில் கால்பட்டாட்டி மோட்சம் எங்கடா?

வீதியுள்ள வேப்பமர நிழலில் நிற்கிறேன் – யோகர்
வீற்றிருந்தே தேரடியில் வீழ்ந்துருள்கிறேன்
நீதி சொல்லி நீயணைப்பாய் என்று நம்புறேன் – நெஞ்சில்
நீயிருக்க என்ன பயம்.... தீமை வெல்லுவேன்!

*- த.ஜெயசீலன்.*

## நிரந்தர நிலையைக்காட்டு

செந்தமிழர் படுந்துயரம் ஒன்றா ரண்டா
சிதைந்துபட அவர்வாழ்வில் தினமும் குண்டா?
வந்தருள்வாய் நல்லைநகர் வாழும் கந்தா
மனமிரங்கி எமக்காக வாசு கந்தா!

அடுத்தடுத்த துயராலே நிலைமை கெட்டு
அன்றாடக் கஞ்சிக்காய் அல்லல் பட்டு
நடுத்தெருவில் நிற்பவர்க்குக் கருணை காட்டு
நல்லூரில் நாயகனே அருளை ஊட்டு!

ஆண்டருள்வாய் முருகா எம் அல்லல் கேட்டு
ஐயாநின் திருவடி எம் தலையில் சூட்டு
நீண்டிருக்கும் பகைமைதனை நில்லா தோட்டு
நிரந்தரமாய்த் தமிழருக்கோர் நிலையைக் காட்டு!

*- தனங்களப்பு வ.சின்னப்பா.*

## காத்தருள்வாய் நல்லூர் நாதா!

எண்ணியவ ரெண்ணி யெண்ணி யேங்கிவாடி
எழுந்தமுதல் அழுந்தும்வரை நோய்துன்பம்
கண்ணீரால் உடல்நனையச் செய்வதென்றால்
கருணையென்னே! தொண்டருக்குக் காவல்யார்தான்
புண்ணான தொண்டர்மனம் பொலிவ தெப்போ
ஐயாவுன் திருவடிகள் தஞ்சமென்றே
பண்ணோடு திருமுறைகள் பாடி நின்றோம்
பரிந்துவந்து காத்தருள்வாய் நல்லூர்நாதா!

*- கந்தமுருகேசதாசன்.*

## முருகனை நாடுங்கள்

குன்றன் பதியை நாடுங்கள்
குறைகள் தீர்ப்பான் பாருங்கள்
பொங்கும் அலையாய் கூடுங்கள்
பொங்கும் மாசு பாருங்கள்

கந்தன் அருளை நாடுங்கள்
காப்பான் நாளும் பாருங்கள்
கைகள் குவித்தே கூடுங்கள்
சதிகள் முடிப்பான் பாருங்கள்

சரவணன் தான் நாடுங்கள்
சாயும் பகை பாருங்கள்
சாந்தி வேண்டிக் கூடுங்கள்
சமைப்பான் அதையே பாருங்கள்

*- வி.ஜெயபால்*
(அரியாலை)

## நல்லைக் குமரன் மலர் - 2000 (08)
# வெளியீட்டு விழா

தலைவர் - திரு. வே. பொ. பாலசிங்கம்
(மாநகர ஆணையாளர்)
காலம் - 14. 08. 2000 திங்கட்கிழமை
முற்பகல் 9. 00 (பு. நே.)
இடம் - நல்லூர் இந்து விடுதி முன்றல்
ஆய்வுரை - திருமதி நாச்சியார்
செல்வநாயகம்
நுண்கலைப்பீடத் தலைவரும், முதுநிலை விரிவுரையாளரும் இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

பயனுள்ள பல ஆக்கங்களைத் தாங்கி நறுமணம் பரப்பும் மலரினைப் பெற்றுப் படித்துப் பயன்பெறும் வண்ணம்அனைவரையும் அன்போடுஅழைக்கின்றோம்.

குறிப்பு:
வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ளுவதற்காக வாகனங்களில் வருகை தருவோர் அரசடிச் சந்தியிலுள்ள பிரதான வீதித்தடையைத் தாண்டி இந்து விடுதிக்கு வருவதற்கு அனுமதிக்கப்படுவர்.

சைவ சமய விவகாரக் குழு
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.
13. 08. 2000 (சி/12481)

## 6 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 07 — 01 — 1936
மறைவு 21 — 07 — 1994

### அமரர் தம்பு துரைராசா

திதி: 13-08-2000

நிறைவாழ்வு வாழ்ந்த எங்கள் ஐயா!
"பாதகச் ஷெல் வீச்சினால்"
இறை நிழல் புகுந்து ஆறாண்டானதையா!

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சங்கானை கிழக்கு,
பண்டத்தரிப்பு,
பிரான்பற்று. (77213)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 01 — 01 — 1944
இறப்பு 25 — 08 — 1999

### அமரர் வேலன் நாகமுத்து (ஆசை)
(காங்கேசன் சிமெந்து கூ. தா. ஊழியர்)

திதி: 13 - 08 - 2000

அன்பின் திருவுருவே! பாசத்தின் ஒளிவிளக்கே!
எங்கள் அன்புத் தெய்வமே! எம்மைப் பிரிந்து
ஆண்டு ஒன்று சென்றாலும் துயரத்தில்
இருந்து நாங்கள் இன்னும் மீளவில்லை ஐயா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய முருகப்பெருமானை வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள், மருமக்கள்.

மாவைகலட்டி,
தெல்லிப்பழை.

தற்காலிக முகவரி:
டாக்டர் சுப்பிரமணியம் றோட்,
கந்தரோடை,
சுன்னாகம்.
(77254)

## நாய்களுக்குத் தடுப்பூசி

வலி. கிழக்கு, ஓக. 13
கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இம்மாதம் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடப்படவுள்ளது.

பின்வரும் தினங்களில் தவறாது ஊசியைப் போட்டுக் கொள்ளுமாறு கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

★ 15 ஆம் திகதி செவ்வாய் காலை 9 மணிக்கு கோப்பாய் வடக்கு ஸ்ரீ சபாபதி நாவலர் சனசமூக நிலையத்திலும், 10. 30 மணிக்கு கோப்பாய் வடக்கு சனசமூக நிலையத்திலும், 12 மணிக்கு கோப்பாய் வடக்கு அம்மன் கோவிலடி சனசமூக நிலையத்திலும்—

★ புதன் காலை 9 மணிக்கு கோப்பாய் மத்தி வெள்ளெருவை பிள்ளையார் சனசமூக நிலையத்திலும் 10. 30 மணிக்கு கோப்பாய் மத்தி ஸ்ரீகாளி அம்பாள் சனசமூக நிலையத்திலும் 12 மணிக்கு கோப்பாய் மத்தி வள்ளி அம்மன் சனசமூக நிலையத்திலும்—

★ வியாழன் காலை 9 மணிக்கு கோப்பாய் தெற்கு நாவலடி சனசமூக நிலையத்திலும், 10. 30 மணிக்கு கோப்பாய் தெற்கு சூரியோதய சனசமூக நிலையத்திலும், 12 மணிக்கு இருபாலை கிழக்கு வீரபத்திரர் கோயிலடி சனசமூக நிலையத்திலும்—

★ வெள்ளி காலை 9 மணிக்கு இருபாலை வட்டக் குளத்தடி சரஸ்வதி சனசமூக நிலையத்திலும், 10. 30 மணிக்கு கல்வியன்காடு ஞானபாஸ்கரோதய சனசமூக நிலையத்திலும், 12 மணிக்கு கட்டப்பிராய் கலைவாணி சனசமூக நிலையத்திலும் —

வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடப்படவுள்ளது.

(இ-180)

## வீதி திருத்தப்படும்

யாழ்ப்பாணம், ஓக. 13
அராலி தபாற்கந்தோர் வீதி விரைவில் திருத்தம் செய்யப்படவுள்தாகத் தெரிவிக்கப்படுகிறது.

வலி. மேற்கு பிரதேசசபைத் தலைவர் என். திரிலோகநாதன் இந்தவீதியைதிருத்தம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

## ஆரம்ப நெறி ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோர் சங்கக்கூட்டம்

ஆரம்ப நெறி ஆசிரியர் தெரிவுக்கு விண்ணப்பித்து இதுவரை தெரிவுக்கு அழைக்கப்படாது பாதிக்கப்பட்டோர் சங்கத்தில் பதிவை மேற்கொண்ட பழைய புதிய அங்கத்தவர்களும் இதுவரை பதியப்படாதோரும் தவறாது (அவசரம்) ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர் கல்லூரியில் 15 - 08 - 2000 10 மணிக்கு (புதிய நேரம்) சமூகம் தரவும். மாகாண இடம் பெயர் சேவை 16 ஆம், 17 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதால் அதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை எடுப்பதற்கு தவறாது சமூகமளிக்கவும்.

தலைவர்
(77264) பா. மணிவண்ணன்

## ஓய்வூதியக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஓக 13
தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு எதிர்வரும் 16 ஆம் திகதியில் இருந்து வழங்கப்படும் என்று தென்மராட்சிப் பிரதேச செயலர் அலுவலகக் கணக்காளர் அறிவித்துள்ளார்.

இலங்கை வங்கி சாவகச்சேரிக் கிளையினால் மானிப்பாய்க் கிளையில் வைத்து எதிர்வரும் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் —

ஏனைய வங்கிகள் கடந்த மாதம் போன்றுகொடுப்பனவுகளை வழங்கும் என்றும் — அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-3)

## நல்லூர் ஆலயச் சூழலில்

யாழ்ப்பாணம், ஓக. 13
நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த உற்சவத்தின் மஞ்சத் திருவிழாவான நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2. 30 மணி தொடக்கம் 3. 30 மணிவரை நல்லூர் கிழக்கு வாசலின் உள்ள அறுபத்திமூவர் நாயன்மார் குருபூசை மடத்தில் சமயச் சொற்பொழிவு பேரவையின் தலைவர் கலாபூஷணம் பே. சந்திரசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நாளை சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் "குருவாய் வருவாய்" என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்துவார். (த-30)

## லங்கா சிமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், ஓக. 13
லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவுகள் 16 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிமுதல் 12. 30 மணிவரை யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியில் வழங்கப்படவுள்ளன.

ஆகவே சகல ஊழியர்களும் தமதுபெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-20)

## தென்மராட்சி, பிரதேச செயலக பிரிவினர்களுக்கான 2000 ஆம் ஆண்டு ஆவணி மாத ஓய்வூதியக் கொடுப்பனவு

எனது பிரதேச செயலக பிரிவினருக்குட்பட்ட ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு 16—08—2000 திகதியில் இருந்து வங்கிகளினால் கொடுப்பனவு செய்யப்படும்.

இலங்கை வங்கி சாவகச்சேரியில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 21-08-2000, 22-08-2000 திகதிகளில் மானிப்பாயில் இயங்கும் இலங்கை வங்கி கிளையில் கொடுப்பனவு செய்யப்படும். ஏனைய நாள்களில் இலங்கை வங்கி பருத்தித்துறைக்கு அருகில் உள்ள சாவகச்சேரி கிளையில் கொடுப்பனவு செய்யப்படும்.

ஏனைய வங்கிகளில் கடந்தமாதம் கொடுப்பனவு செய்யப்பட்டது போல் கொடுப்பனவு செய்யப்படும்.

குறிப்பு: 2000 ஆம் ஆண்டு மே மாதம் ஓய்வூதியம் பெற்றுக் கொள்ளாதோர் தங்களுடைய காரணங்களைக் குறிப்பிட்டு தாங்கள் ஓய்வூதியம் பெறும் வங்கிமுகாமையாளருடாக பிரதேச செயலர், பிரதேச செயலகம் தென்மராட்சி. என முகவரியிட்டு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பு. சுந்தரம்பிள்ளை
(சி/12485) பிரதேச செயலர், தென்மராட்சி.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி குமாரையா சரஸ்வதி (சரசாச்சி)

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த திருமதி குமாரையாசரஸ்வதி நேற்று (12. 8. 2000) சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரையாவின் (ஆச்சாரி) அன்பு மனைவி ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13-8 2000) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் யாழ். சோம்பையன் மணல் மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தற்போதைய முகவரி:-
12. B. S. வீதி,
சோனகத் தெரு,
யாழ்ப்பாணம்.
(77241)

தகவல்:-
சு. கந்தசாமி (ஆசிரியர்)
(பெறா மகன்)
சங்கத்தானை,
சாவகச்சேரி.

### சதாசிவம் மகேந்திரன்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவரும் வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி அலுவல்கள் திணைக்களத்தின் கணக்காளருமாகிய சதாசிவம் மகேந்திரன் 12-08-2000 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம்—விசாலாட்சி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற திரு. திருமதி சண்முகம் தம்பதியரின் மருமகனும் மங்கையர்க்கரசி (ஆசிரியை, தி/பெருந்தெரு விக்னேஸ்வரா வித்தியாலயம்) அவர்களின் கணவரும், லக்ஷ்மணன் (U K.), கீதாஞ்சலி (தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரி), பிரதன் (U. K) ஆகியோரின் தந்தையும், ம. மலரன்பன் (N S. B., திருமலை), சித்திரா (U. K.) ஆகியோரின் மாமனாரும் சரண்யா, சாரங்கா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14-8-2000) திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு திருகோணமலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
திருமதி ம. மங்கையர்க்கரசி.
(மனைவி)
இல. 57, வன்னியார் ஒழுங்கை,
திருகோணமலை.
தொலைபேசி இல. 026-22035 (சி/12488)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

சுமதி பரம்சோதி என்பவருடைய வி.அ.அ. யாழ். வைத்திய சாலைக்கும் பண்டத்தரிப்புக்கும் இடையில தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுமதி பரம்சோதி, பிரான்பற்று, பண்டத்தரிப்பு என்னும் முகவரியில் ஒப்படைக்கும் வண்ணம் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். (77224)

திருமதி சோமசுந்தரம் இராசலட்சுமி ஆகிய எனது குடும்ப அட்டை, நல்லூர் கிராமிய வங்கி புத்தகம், தேசிய அ.அ., விசேட அ.அ. ஆகியவை நல்லூர் பிரதேச செயலகத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.2, செட்டித் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தயவுசெய்து ஒப்படைக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றேன். (77252)

ஐயனார் கோயில் வீதி, சுன்னாகத்தைச் சேர்ந்த யோகநாதன் காண்டீபன் என்பவரது தேசிய அ.அ. (இல-782693654V), விஷேட அ.அ. (இல-0906000456) என்பன I.C கவருடன் சுன்னாகம் ஸ்ரேசன் வீதிப் பகுதிக்குள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சுன்னாகம், டைமன் ஸ்ரோர்ஸ் எனும முகவரியில் ஒப்படைத்து உதவவும். (77247)

வீரபாண்டியன் ஒழுங்கை, துன்னாலை கிழக்கு, கரவெட்டியைச் சேர்ந்த நாகராசா ஜெயலட்சுமி என்பவருடைய வி.அ.அ. (90902 8198) 524 பிரிகேட் பாஸ்ஈம் மந்திகைச் சந்திக்கும் தாமரைக் குளத்தடிச் சந்திக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மந்திகை உபதபால் கந்தோரில் ஒப்படைக்கவும். (77227)

17A, இராஸேஸ்வரி வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுஜீவா செல்வரெட்ணம் என்பவரது தேசிய அ.அட்டை (இல - 787882684V) விசேட அ.அ. (இல - 0902006902) யாழ். பல்கலைக் கழக அ.அ. (97/DG/B/31) என்பன யாழ். பல்கலைக்கழகத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ்.பல்கலைக்கழகத்தில் அல்லது வ.செல்வரெட்ணம், வாகீஸ்வரி வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (77256)

## திருமண சேவை

எல்லா மதங்களிலும மணமகள் உண்டு 1968ஆம் ஆண்டு அனுஷம் நட்சத்திரமுடைய மணமகன் டாக்டருக்கு மணமகள் தேவை. பழைய தொடர்பு உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமணசேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (77248)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1962ஆம் ஆண்டு பிறந்த கிளிநொச்சியில் ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றும் அச்சுவினி நட்சத்திரம் உதயத்தில் செவ்வாய்க் குற்றமுடைய பட்டதாரி மணமகனுக்குத் தகுதி கொண்ட உத்தியோகமுடைய கிளிநொச்சியில் சென்று வசிக்கக்கூடிய மணமகள் எதிர்பார்க்கப்படுகின்றது. உடன் தகுந்த விவரங்களும் உள்ளடங்கலாய் தொடர்புகளுக்கு விள. இல. 1073-மே/பா - உதயன், யாழ்ப்பாணம். (77053)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ உயர் குடும்பத்தைச் சேர்ந்த அரச தொழில் புரியும் நற்குணம் மிக்க அழகிய மணமகளுக்கு (வயது47) பெற்றோர் தகுதிகொண்ட மணமகனை எதிர்பார்க்கின்றனர். தொடர்புகளுக்கு: ஸ்ரீராகவேந்திர ம்ருத்திக்கா, இல. 159A (363), கோயில் வீதி, நல்லூர். (77179)

## உடன விற்பனைக்கு

கீழ்வரும் பொருள்கள் உடன் விற்பனைக்கு உண்டு. (1) TOSHIBA COLOUR T.V 26" (2)DIGITAL RADIO SET SONY (3)AUDIO CD PLAYER G.R. X.8. SONY (4)S.D.300 PANASONIC - DECK (5)NIPON BOOSTER AND UHF-VHF ANTENNA (6) SEWING MACHINE SINGER தொடர்பு: இல.67, செட்டித்தெரு, நல்லூர். (77109)

## விற்பனைக்கு

ஆடு, கடாய்க்குட்டிகள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: P.V சூரியர், 10, கல்லூரி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (77207)

நல்ல இன பால் ஆடும் அதன் குட்டிகளும், ஜேசி இன நாம்பன் கன்றும், 1 சோடி பொமேரியனும் அதன் குட்டிகளும் (கறுப்பு, பிறவுண்) விற்பனைக்குண்டு. தொடர்பு: லிங்கமூர்த்தி மயூரன், நவாலி அரசடி மகாவித்தியாலயம் அருகில். (77239)

ஜெனறேற்றர் 1300 **out put** றொபின்(யப்பான்) நீர் இறைக்கும் இயந்திரம்(**mk**12), 40அடி அல்கத்தின் பைப்பும அதற்குரிய பொருள்களும், **Bajaj scooter, self start (450 Km** மட்டும் ஓடியது) எல்லாவற்றிற்கும் கடையில் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டுக்களும் உண்டு. தொடர்பு: சி.சிறிகணேஸ், நித்தியானந்தபதி, கே.கே.எஸ் றோட், கோண்டாவில். (77225)

## கண்டெடுக்கப்பட்டது

இல.9 சென்பற்றிக்ஸ வீதி, குருநகரைச் சேர்ந்த சிந்தாத்துரை - டானியல் என்பவருடைய அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. உரியவா தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு: மு.சிவபாலன், 17, பிள்ளையார் ஒழுங்கை, திருநெல்வேலி. (77246)

## காட்டுக்கல் விற்பனைக்கு

காட்டுக்கல் ஒரு டிராக்ரர்லோட் விற்பனைக்கு உண்டு தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்: என். தியாகநாதன், 12/4, கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம். (77212)

## விற்பனைக்கு

பஞ்சுமிட்டாய் மெஷின் விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 7000/- தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி S. சதீஸ், 15/2, முருகேசர் வீதி, நல்லூர். (77253)

9 மாதம் நிரம்பிய கறுப்பு நிறங் கொண்ட அல்சேஷன் பெண் நாய்க் குட்டியும் ஒரு வயது நிரம்பிய ஆண் நாயும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு க. தீலீபன் M.S லேன், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (77259)

6 வகையான சைப்பிரஸ் கன்றுகளும், பலவகையான குறோட்டன்களும் மற்றும் பாம், செவ்வரத்தை, மினி எக்ஸ்சோறா (பிங்), பிறைட் ஒவ் ஜப்பான் மற்றும் சாடி வகைகளும் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- S. பாக்கியநாதன் **152/2**, கோயில் வீதி, பிளான்ட் பரடைஸ் முன்வளவு, யாழ்ப்பாணம். (77101)

# நியமனம் வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.13

வேலையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள யாழ். மாவட்டத்திலுள்ள உத்தியோகப் பற்றற்ற கணக்காய்வாளர்களுக்கு நியமனம் வழுங்குமாறுயாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி செயலாளர்நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவிடம் உத்தியோகப்பற்றற்ற கணக்காய்வாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி சங்கத்தினால் அவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எங்களால் 99 டிசம்பர் 10 ஆம் திகதி தங்களுக்கு அனுப்பப்பட்ட "நிரந்தர நியமனத்துக்கான கோரிக்கை" என்ற தலைப்பிடப்பட்ட கடிதத்தின் எதிரொலியாக நாம் கணக்காய்வு சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளோம். இன்று வரை மாதங்கள் கடந்த நிலையிலும் எமக்கு எதுவித சாதகமான பதிலும் கிடைக்கவில்லை. நாம் பல முறைகள் தங்களுடன் கடிதம் மூலமும், தங்களது கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளருக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் எமது பிரச்சினைகளை தொடர்ச்சியாக வெளிக்காட்டி வந்துள்ளோம். அத்துடன் காலத்துக்குக் காலம் மாற்ற முற்று வந்துள்ள ஒவ்வொரு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கும் எமது பிரச்சினையை கடிதம் மூலம் நேரடியாகத் தெரியப்படுத்தி வந்துள்ளோம்.

எமக்கு இந்த கணக்காய்வு வேலைத்திட்டத்தை வழங்கும்போது இருந்த கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சண்முகலிங்கம் தொடர்ச்சியாக இந்த வேலை வாய்ப்பை வழங்குவதாக தெரிவித்த உறுதிமொழியின் பிரகாரம் நாம் வேறு எந்தவொரு வேலை வாய்ப்புக்கும் விண்ணப்பிக்காது இருந்துள்ளோம்.

தொடர்ச்சியாக இரு வருடங்கள் பணிபுரிந்து வந்த எமக்கு இந்த வேலை இடைநிறுத்தல் மூலம் வருமானத்தை இழந்ததோடு சமுதாய அந்தஸ்தினையும் இழந்து விரக்தியுற்றுள்ளோம்.

தாங்கள் எமது நிலையை உணர்ந்து எமது நியமனம் தொடர்பாக உடனடித்தீர்வை எடுப்பீர்கள் என எதிர்பார்த்து நிற்கின்றோம்.

இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## சாயி சமித்தியில் ஆன்மீக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஓக.13

யாழ்.பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமித்தியில் நாளை திங்கட்கிழமை ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

காலை 9 மணி முதல் ஓம்காரம், காயத்திரி ஜெபம், பஜனை, பண்ணிசை, சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம்பெற்று நாராயண சேவையுடன் நிறைவுபெறும். (ஐ)

# விலங்கு உலகத்தில்....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

அது- ஒரு சமயம் கிரேக்கர்களுக்கிடையே போர் நிகழ்ந்து கொண்டிருந்தது. பெண்களுக்கு அதில் ஈடுபாடு கிடையாது. விருப்பமுமில்லை. அதனால் பெண்கள் எல்லோரும் ஒன்று கூடி என்ன செய்யலாம் என்று ஆராய்ந்தார்கள். ஒரு பெண் எழுந்து "ஆண்களைச் சுலபமாக அடக்கலாம் அவர்கள் ஓடியாடி அலைந்த பின் உல்லாசம் தேடி வீடுகளுக்குத்தான் வருவார்கள். அவர்களை நெருங்க விடாதீர்கள் எல்லாம் சரிப்பட்டுவரும்" என்றாள். சிலநாள்கள் தீர்மானப்படி நடந்தார்கள். ஆண்களின் பாடு அதோ பாடாகிப் போய் விட்டது. ஆயினும் பெண்களின் உளவலிமை யாவரும் அறிந்தது தானே! "மயக்குபவர்கள் ஆண்கள், மயங்குபவர்கள் பெண்கள்" என்பது உண்மைதான் போலும். கொஞ்சம் கொஞ்சமாக இரகசியமாக விட்டுக் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். அதனால் இறுதி வெற்றி ஆண்களுக்குத்தான். நாடகத்தின் பெயர் "லைசிஸ் றாற்றா", எழுதியவர் "அறிஸ்ற்றோ பேன்ஸ்", வாசித்துத் தான் பாருங்களேன்.

கி.மு. பெண்கள் இப்படி, கி.பி. பெண்கள் எப்படியோ?

கி.பி. பெண்களுக்கு ஓர் எடுத்துக் காட்டு. "வீட்டுக்கு வீடு வாசற்படி" என்பார்களே, அனுபவபூர்வமான வாக்கியம். வீட்டில் நச்சரிப்புத்தாங்காமல் எப்பவாவது அரிசி, பருப்பு என்று வாங்கி வந்து கொடுப்பேன். எனது கஷ்டகாலம் அது வண்டுதியதாக இருக்கும். "அரிசி, பருப்பு வாங்கத் தெரியாது எப்படிப் பள்ளிக் கூடங்கள் நடத்தினியள்?" என்ற பாணம் வரும். "மௌனம் கலக நாஸ்தி" என்ற கொள்கையை நான் கடைப்பிடிக்க வேண்டியிருக்கும். இன்னுமொரு வழமையான பாணம் "BOTANY EXPERT என்று பெயர், காய்கறி வாங்கத் தெரியாது" பிஞ்சாக எதை வாங்க வேண்டும், முற்றியதாக எதை வாங்கவேண்டும் என்று தெரிந்தாலும், கடையில் காய்கறிகளைப் பார்த்ததும் நினைவு வேறு எங்கோ போய்விடும். விளைவு... முற்றல் வெண்டிக்காயும், பயிற்றங்காயும், கத்தரிக்காயும், பிஞ்சுப் பாவற்காயும், பூசினிக்காயும் வீடு வந்து சேரும். இப்படிப்பட்ட பொருள்களை தலையில் கட்டிவிட எம் போன்றவர்கள் இருக்கின்றார்களே! யாரை நோவது? யாரை நொந்து என்ன பயன்??


மீண்டும் ஆரம்பம்...

**றோய்**

**தொலைத்தொடர்பு சேவை**

'செபவாசா', அல்வாய் - வடமேற்கு, அல்வாய்.

*இரவு பகல் சேவை*

(77240) **தொலைபேசி இல. 070-212590**



உ

இணுவில்

ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் தேவஸ்தானம்

**தீப பூஜை**

* காலம்: **நாளை (14-08-2000) திங்கட்கிழமை**

* நேரம்: மாலை 3.00மணி பூஜையைத் தொடர்ந்து மாலை 4.00 மணிக்கு *தீப பூஜை* ஆரம்பமாகும். தொடர்ந்து மாலை 5.15 மணிக்கு சுவாமி திருவீதியுலாவரும் காட்சியும் இடம்பெறும்.

இணுவில். **ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் தேவஸ்தானம்.** (C/12483)



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

சாவகச்சேரி நகரிற்கு பெருமை சேர்க்கும் வகையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட புதிய பீடாதிபதியாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டு பதவியுயர்வு பெற்ற யாழ். பல்கலைக்கழக முதல் பெண் பீடாதிபதி என்ற பெருமைக்குமுரிய

**பேராசிரியர்**

**செல்வி வசந்தி அரசரட்ணம்**

***அவர்களை மனமார வாழ்த்திப் பாராட்டுகின்றோம்***

**A.K.துரைரத்தினம் குடும்பத்தினர்,**
**இ. மீனாம்பிகை**

சாவகச்சேரி. (77257)



**ரஷ்யாவில் உயர்கல்வி**

***சர்வதேச அங்கீகாரம் பெற்ற மொஸ்கோ, லுமும்பா போன்ற ரஷ்யப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயில ஆனுமதி பெற்றுத் தரப்படும்.***

1. மருத்துவம் (ஆங்கிலம்)
2. பொறியியல் (ஆங்கிலம்)
3. கணனியியல் (ஆங்கிலம்)
4. ஏனைய துறைகள் - பொருளாதாரம் போன்றவை.

இறுதிச் சந்தர்ப்பம்

*மேலதிக விவரங்களுக்கு உடனே தொடர்பு கொள்ளவும்*

**Dr.க.சிவனடியான்**

*நவாலி, மானிப்பாய்.*

(77182)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 1937 — 06 — 21

மறைவு 2000 — 07 — 12

**திருமதி**

**சிவனேசராணி குணத்துரை (ராணி)**

(சுதுமலை, வடக்கு)

*எப்படி மறக்குமெம் நெஞ்சம்?*
*தாயே! நீ எம்மொடு கூடி*
*வாழ்ந்த வாழ்வை.*
*எப்படி மறக்குமெம் நெஞ்சம்?*
*ஆடிப்பாடி மகிழ்ந்த தெல்லாம்.....*
*அனைவர்க்கும் நற்சேவகியாய் நீ*
*ஓடியாடி உழைத்த தெல்லாம்....*
*தாயே! நீ வாழ்ந்த வாழ்வை*
*எப்படி மறக்குமெம் நெஞ்சம்?*
*என்றென்றும், நின் அழியா நினைவுகள்*
*எம்மோடே....!*

வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

**- குடும்பத்தினர்.**

(77154)

# பதில் கணக்காளர் ஆள்சேர்ப்பு: 25 பேருக்கு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஓக13

வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவையில் பதில் கணக்காளர் பதவிக்கு ஆள்சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சைகள் எதிர்வரும் 21 ஆம் திகதி யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளன.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள 25 பேரின் பெயர் விவரங்கள் வருமாறு :-

வயிரவப்பிள்ளை நடராசா, இராசரத்தினம் அருணகிரி (கணக்குப் பதிவாளர், வகுப்பு I, வலிகாமம் மேற்கு பிரதேச சபை), எ.தேவஅருள்ராஜா (கணக்குப்பதிவாளர் வகுப்பு - I, வலயக்கல்வி அலுவலகம், வேலணை), கதிகாமு வல்லிபுரம் ஆறுமுகசாமி (கணக்குப்பதியுநர் வகுப்பு - I, வலயக்கல்வி அலுவலகம், சுன்னாகம்),

ஆறுமுகம் சுப்பையா பஞ்சரத்தினம் (கணக்குப்பதியுநர் வகுப்பு - I, பிரதேச செயலகம், உடுவில்), மருதமுத்து சுப்பிரமணியம் (கணக்குப் பதியுநர் வகுப்பு -I, மாநகர சபை, யாழ்ப்பாணம்), சுந்தரம் சுந்தரேசன் (கணக்குப்பதியுநர் வகுப்பு - I, மாநகர சபை, யாழ்ப்பாணம்), கந்தசாமி பலராமன் (கணக்குப்பதியுநர் வகுப்பு - I, வலிகாமம் தென் மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய்),

செல்வி ஆறுமுகம் ஞானதேவி (கணக்குப் பதியுநர் வகுப்பு - I, நகர சபை, சாவகச்சேரி), திருமதி பூபால பிள்ளை சந்திரபூரணி (கணக்குப் பதியுநர் வகுப்பு -I, நகராட்சிமன்றம் பருத்தித்துறை), சின்னத்தம்பி மாரிமுத்து குமாரசாமி (கணக்குப்பதியுநர் வகுப்பு - I, நல்லூர் பிரதேச சபை திருநெல்வேலி), செல்வி செல்லப்பாக்கியம் தில்லைநாயகி (எழுதுநர் வகுப்பு - II 'அ', பிரதேச செயலகம், கரவெட்டி),

நடராஜா யோகேந்திரராஜா கூட்டுறவுப் பரிசோதகர் II 'அ' கூட்டுறவு அலுவலகம், யாழ்.வைமன் வீதி), திருமதி மதனா சண்முகராஜா (கணக்குப்பதியுநர் வகுப்பு - II 'அ' பிரதேச செயலகம், பருத்தித்துறை),

திருமதி சிவசக்தி கனகசபாபதி (எழுதுநர் வகுப்பு - I, பிரதேச செயலகம், சங்கானை), செல்வி வைரமுத்து இந்துமதி (எழுதுநர் வகுப்பு - II,'அ' வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி), செல்வி தம்பிராசா அமிர்தா (கணக்குப்பதியுநர் வகுப்பு - II, 'அ' பிரதேச செயலகம், கோப்பாய்),

திருமதி ரவீந்திரன் பிறேமா (கணக்குப்பதியுநர் - II, 'அ' பிரதேச செயலகம் பளை), சின்னத்தம்பி சிவலிங்கம் (எழுதுநர் வகுப்பு - I, பிரதேச செயலகம் சங்கானை), சோமசுந்தரம் சிவசுந்தரம் (எழுதுநர் வகுப்பு - II 'அ' வலயக் கல்வி அலுவலகம், வேலணை), இளையதம்பி கந்தையா இராஜேஸ்வரன் (கணக்குப்பதிவாளர் வகுப்பு - I மாநகர சபை, யாழ்ப்பாணம்),

சீனியர் வீரவாகு பரமேஸ்வரன் (கணக்குபதியுநர் வகுப்பு - I, வலயக்கல்வி அலுவலகம், மருதனார் மடம், சுன்னாகம்) கதிர்காமு பொன்னுத்துரை (எழுதுநர் வகுப்பு - I, வலயக்கல்வி அலுவலகம் மருதனார்மடம், சுன்னாகம்), செல்வி சிவபாதம் சத்தியா (பட்டதாரி ஆசிரியர், வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), கந்தையா பாலசுப்பிரமணியம் சிவானந்தம் (ஆய்வு உத்தியோகத்தர் வகுப்பு - I, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம்). (இ-9-180)

# அரசமைப்பு நகல் நிறைவேற ஒருபோதும் ஆதரவு வழங்கோம்!

## காமினி அத்துக்கோறள அறிவிப்பு

கொழும்பு,ஓக.13

அரசமைப்புச் சீர்திருத்தச் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கு ஐ.தே.கட்சி ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்கமாட்டாது.

ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறள இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கலவான தேர்தல் தொகுதியில் நேற்று மாலை நடைபெற்ற விசேட கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் சமயத் தலைவர்களினதும், அரசியல் கட்சிகளினதும் மற்றும் மக்களினதும் ஆதரவைப் பெற்றுக்கொள்ளாமல் அரசமைப்புச் சீர்த்திருத்தச் சட்டநகலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முன்வந்துள்ளது.

எனவே அது ஒருபோதும் நிறைவேற்றப்படமாட்டாது என்பதை நாடாளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற விவாதங்கள் எடுத்துக்காட்டியுள்ளன. மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்காத நிலை ஏற்பட்டதாலேயே அரசமைப்புச் சீர்திருத்தச்சட்டமூலம் தொடர்பான வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சட்டமூலத்தை முற்றாக வாபஸ் பெறச்செய்வதற்காக ஐ.தே. கட்சி நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் நடவடிக்கை எடுக்கும்.

இவ்வாறு காமினி அத்துக்கோறள மேலும் தெரிவித்தார். (ஐ-7)

## கிராமசேவையாளர் ஏற்பாட்டில் மஹோற்சவம்

வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை நடத்தும் பொறுப்பு அப்பகுதி கிராம உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆலயம் தொடர்பாக யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்து வரும் நீதிபதி பா.சுப்பிரமணியம் இந்த வருடத்துக்கான மஹோற்சவத்தை நடத்தும் முழுப்பொறுப்பையும் வட்டு. கிழக்கு கிராம உத்தியோகத்தர் க.ஸ்ரீகரனிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 4ஆம் திகதி ஆரம்பமான இந்த உற்சவம் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

அனைத்து உபயகாரரிடம் இருந்தும் தேவையான பணத்தைப் பெற்று கொடியேற்றம் முதல் சகல திருவிழாக்களையும் நடத்தி முடித்த பின்பு இது தொடர்பான வரவு செலவு அறிக்கையை எதிர்வரும் 23ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படியும் நீதிபதி உத்தரவிட்டார்.

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஓக.13

யாழ். குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 12ஆம் திகதிவரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

### சங்கானை

| | |
|---|---|
| 511/145504/A | 513/150522/A |
| 513/150522/B | 513/150522/C |
| 513/150522/D | 513/150704/A |
| 513/150704/B | 513/150721/A |
| 513/150721/B | 513/150721/C |
| 513/150757/A | 513/150758/A |
| 513/150758/B | 513/150802/A |
| 513/151835/A | 513/151835/B |
| 513/153292/A | 513/153292/B |

### யாழ்ப்பாணம்

511/144786/A

### கோப்பாய்

| | |
|---|---|
| 511/134074/A | 511/134074/B |
| 511/136451/A | 511/136692/B |
| 511/136692A | 511/143287/A |
| 511/143333/A | 511/144911/C |
| 511/144911/D | 511/144913/A |
| 511/144913/B | 511/144913/C |
| 511/148926/A | 511/148926/B |
| 511/148952/A | 511/148953/A |
| 511/148953/B | 511/149770/A |
| 511/150808/A | 511/150808/B |
| 511/150810/A | 511/150819/A |
| 511/150819/B | 511/150819/C |
| 511/150819/D | 511/150850/A |
| 511/150850/B | 511/150850/C |
| 511/150900/A | 511/150900/B |
| 511/150900/C | 511/150900/D |
| 511/150900/E | 511/150900/F |
| 511/153111/A | 511/153111/B |
| 511/153111/C | 511/153111/D |
| 511/153172/A | 511/153173/A |
| 511/153173/B | 511/153173/C |
| 511/153174/A | 511/153174/B |
| 511/153176/A | 511/153176/B |
| 511/153178/A | 511/153178/B |
| 511/153190/A | 511/153190/B |
| 511/153191/A | 511/153256/A |
| 511/153256/B | 511/153256/C |
| 511/153256/D | 511/153503/A |
| 511/153503/B | 511/153504/A |
| 511/153504/B | 511/153504/C |
| 511/153512/A | 511/153512/B |
| 511/153527/A | 511/153532/A |
| 511/154300/A | 511/154302/A |
| 511/154302/B | 511/154302/C |
| 511/154320/A | |

### நல்லூர்

| | |
|---|---|
| 511/122929/A | 511/136085/A |
| 511/136087/A | 511/136806/A |
| 511/136806/B | 511/144757/A |
| 511/144787/A | 511/144840/A |
| 511/144844/A | 511/144844/B |
| 511/144845/A | 511/144847/A |
| 511/144849/A | 511/144859/A |
| 511/144859/B | 511/144923/A |
| 511/144923/B | 511/144933/A |
| 511/144965/A | 511/144967/A |
| 511/144968/A | 511/145087/A |
| 511/145165/A | 511/145301/A |
| 511/145325/A | 511/145329/A |
| 511/145469/A | 511/145470/A |
| 511/145471/A | 511/145480/A |
| 511/145571/A | 511/145683/A |
| 511/145690/A | 511/145696/A |
| 511/145697/A | 513/134797/A |
| 513/134797/B | 513/134797/C |
| 513/150417/A | 513/150417/B |
| 513/150418/A | 513/150510/A |
| 513/150510/B | 513/150510/C |
| 513/150510/D | 513/153354/A |
| 513/153354/B | 513/153354/C |
| 513/153354/D | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 513/150364/A | 513/150364/B |
| 513/150364/C | 513/150399/A |
| 513/150399/B | 513/150399/C |
| 513/150568/A | 513/150568/B |
| 513/150793/A | 513/151885/A |
| 513/151885/B | 513/151923/A |
| 513/152021/A | 513/152035/A |
| 513/152071/A | 513/153241/A |
| 513/153241/B | 513/153330/A |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 513/150367/A | 513/150367/B |
| 513/151765/A | 513/151987/A |
| 513/151987/B | |

### உடுவில்

| | |
|---|---|
| 511/144936/A | 511/144936/B |
| 511/144958/A | 511/145489/A |
| 511/145489/B | 511/145491/A |
| 513/127114/A | 513/127114/B |
| 513/127114/C | 513/127114/D |
| 513/150671/A | 513/150671/B |
| 513/150671/C | 513/150671/D |
| 513/150671/E | 513/150671/F |
| 513/151761/A | 513/151892/A |
| 513/151892/B | 513/151892/C |
| 513/151892/D | 513/151916/A |
| 513/151916/B | 513/151916/C |
| 513/151916/D | 513/151946/A |
| 513/151946/B | 513/152102/A |
| 513/152102/B | |

## கல்வி நிர்வாக சேவைப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஓக.13

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு, இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்வதற்கான திறந்த போட்டி பரீட்சை நடைபெறவுள்ளது.

மாகாண கல்வி செயலாளரினதும் ஆளுநரதும் முயற்சியால் நடைபெறவுள்ள இந்தப் போட்டிப்பரீட்சை தொடர்பான விவரங்கள் இம்மாதம் 25ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ளன.

தகுதியுடையவர்கள் செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர் எஸ்.கமலநாதன் தெரிவித்துள்ளார். (க-10)

## செயலகத்தில் சமுகமளிக்க கோரிக்கை

யாழ்.மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் சகல தரத்திலான உத்தியோகத்தர்களையும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு செயலகத்துக்கு தவறாது சமுகமளிக்குமாறு யாழ்.அரச அதிபர் கேட்டுள்ளார். (இ-9)

## சேவைக் கட்டணம் அதிகரிப்பு

நிவாரண விநியோகத்துக்காக ப.நோ.கூ.சங்கங்களுக்கு யாழ். செயலகத்தினால் வழங்கப்படும் சேவைக் கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது.

இந்த சேவைக்கட்டணத்தை அதிகரிக்குமாறு ப.நோ.கூ.சங்க பிரதிநிதிகள் யாழ்.அரச அதிபரிடம் விடுத்திருந்த கோரிக்கையினைத் தொடர்ந்து ஒகஸ்ட் மாதத்தில் இருந்து 50 சதத்தினால் சேவைக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)


உங்கள் கண்களைச் சரியாகப் பரிசோதித்து கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

**றெனி மூக்குக் கண்ணாடி அகம்**

இல.540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இல.288, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(C/12484)



உ

**அளவெட்டி - நாகேஸ்வரம்**

**ஸ்ரீ நாகவரதநாராயணர் தேவஸ்தானம்**

**மஹோற்சவ விஞ்ஞாபனம்**

(14-08-2000 - 25-08-2000)

நாமம் பலசொல்லி நாராயணா வென்று
நாமங்கை யால் தொழுதும் நன்னெஞ்சே - வா மருவி
மண்ணுலக முண்டுமிழ்ந்த வண்டறையும் தண்டுழாய்
கண்ணனையே காண்கநங் கண். - பேயாழ்வார்

மெய்யன்பர்களே!

நிகழும் விக்கிரம வருடம் ஆடி மாதம் 30ஆம் நாள் (14-08-2000) திங்கட்கிழமை தொடக்கம் ஆவணி மாதம் 9ஆம் நாள் (25-08-2000) வெள்ளிக்கிழமைவரை மேற்படி உற்சவம் நடைபெறும். அன்பர்கள் அனைவரும் தரிசனை செய்து இஷ்ட சித்திகள் பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

* விழாக் கால நேர ஒழுங்குகள் *

| | |
|---|---|
| முற்பகல் 9.00 மணி அபிஷேக பூசைகள் | பிற்பகல் 3.00 மணி கூட்டுப்பிரார்த்தனை |
| முற்பகல் 10.00 மணி தம்ப பூசை | பிற்பகல் 3.30 மணி தம்பபூசை |
| முற்பகல் 11.00 மணி வசந்த பூசை | பிற்பகல் 4.30 மணி வசந்த பூசை |

| | | |
|---|---|---|
| கொடியேற்றம : | 14-08-2000 | திங்கள் முற்பகல் 11.30 மணி |
| தேர் வீதி வலம : | 23-08-2000 | புதன் முற்பகல் 10.30 மணி |
| உறியடி உற்சவம : | 23-08-2000 | புதன் பிற்பகல் 5.00 மணி |
| ஸ்ரீ ரங்கநாதர் இலட்சுமி பாதபூசை : | 24-08-2000 | வியாழன் முற்பகல் 9.00 மண |
| தீர்த்த உற்சவம : | 24-08-2000 | வியாழன் முற்பகல் 10.30 மண |
| ஆஞ்சநேயர், வைரவர் அபிஷேகம், பொங்கல : | 25-08-2000 | வெள்ளி முற்பகல 9.00 மணி |
| திருக்கல்யாணம : | 25-08-2000 | வெள்ளி பிற்பகல் 2.00 மணி |

பிரதம குரு: சிவஸ்ரீ இ. மகாலிங்கக்குருக்கள் (அழகொல்லை, அளவெட்டி).
நிரந்தர பூசகர்கள்: சிவத்திரு கு. ஞானசுதன், தி. வரோதயன்.
மங்கள வாத்தியம: அளவையூர் கணேஸ் பாலச்சந்திரன் குழுவினர்.

இங்ஙனம்
பொறுப்புரிமை - பரிபாலன சபை
நாகேஸ்வரம், அளவெட்டி.

(77244)

# தொண்டர் சேவையில் ஈடுபடும் நமது இளம் தலைமுறை கூறுவது....




'பாடசாலை விடுமுறை என்றால் எங்களுக்கு ஒரே கொண்டாட்டம். நாள் முழுக்க கூத்தடிப்போம்; விளையாடுவோம். காலையில் 7.00 மணிக்குத்தான் படுக்கையிலிருந்து எழுந்திருப்போம். ஆனால் இம்முறை நல்லூர் திருவிழாவில் தொண்டு செய்வது ரொம்பவும் நல்லது என்று பெரியவர்கள் சொன்னபடியால் அதிகாலையில் 3.00 மணிக்கே எழும்பி சந்தோசமாக சேவைக்கெனப் புறப்பட்டு விடுகின்றோம். நல்லூரில் சேவை செய்வது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. இதற்காக நித்திரை விழிப்பதோ, அல்லது கால்கடுக்க வெயிலில் நிற்பதோ எங்களுக்கு ஒன்றும் பெரிதாகப்படவில்லை. ஒரு சில அண்ணாமார், ஐயாமார் எங்களைக் கோபிக்கத்தான் செய்கிறார்கள்; அடிக்கவும்தான் வருகின்றார்கள். ஆனால் நாங்கள் கவலைப் படுவதில்லை. எல்லாவற்றையும் முருகனின் பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம். எங்களைக் கோபிக்கும் அண்ணாமாரை யாரும் வெறுக்கவேண்டாம். அவர்களும் முருகனடியார்கள் என்றபடியால் இனிமேல் அப்படி நடந்து கொள்ளவேமாட்டார்கள். உற்சவம் சிறப்பாக நடந்தேற எல்லோரும் ஒத்துழைப்போம்'

- நல்லூர் உற்சவ காலத் தொண்டர்கள் கூறும் இந்த மொழிகள் பக்தர்களின் கவனத்துக்குச் சமர்ப்பணம்.

# மட்டு. இளைஞனின் கொலை தொடர்பாக நீதி விசாரணை

## ஜோசப் எம்.பி. ஜனாதிபதியிடம் கோரிக்கை

மட்டக்களப்பு,ஓக.13

மட்டக்களப்பு சித்தாண்டி கிராமத்தைச் சேர்ந்த அருணாசலம் சந்திரமோகன் என்பவரின் கொலை தொடர்பாக விசாரணை செய்வதற்கு ஓய்வுபெற்ற சிரேஷ்ட நீதியரசர் ஒருவர் தலைமையில் நீதி விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கொலை சம்பந்தமாக பல சந்தேகங்கள் எழுந்துள்ளதால் இளைப்பாறிய நீதியரசர் ஒருவரின் தலைமையில் விசாரணை நடத்தி சம்பந்தப்பட்ட கொலையாளிகள் நீதியின்முன் நிறுத்தப்படவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

கடந்த 9ஆம் திகதி கொல்லப்பட்ட அருணாசலம் சந்திரமோகனின் மரணவிசாரணையின்போது சாட்சியமளித்த அவரது மனைவி இக் கொலைக்கு காரணம் இராணுவத்தினர் என்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

தனது கணவரை இராணுவத்தினர் வெட்டிக் கொன்றதாகவும் தான் சம்பவ இடத்திற்கு சென்றபோது கணவரின் தலையை 'சொப்பிங்' பை ஒன்றில் போட்டுக்கொண்டு இராணுவத்தினர் வருவதைக் கண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

அது மட்டுமல்ல மரணவிசாரணையின்போது தலையும் உடலும் புறம்பாகவே கையளிக்கப்பட்டுள்ளன.

இப்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-5)

### வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த இரண்டு மாதங்களாக வழங்கப்படவேண்டிய நிவாரணக் கொடுப்பனவை நிலுவையுடன் சேர்த்து வழங்குமாறு கோரி கடந்த வியாழக்கிழமை முதல் இவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இவர்களுக்கான நிவாரணப் பணத்தில் ஒரு பகுதியை வழங்குவதற்கு வவுனியா அரச செயலகத்திலிருந்து திட்டப் பணிப்பாளர் தலைமையிலான அதிகாரிகள் குழுவினர் நேற்று பூந்தோட்டம் சென்றிருந்தனர்.

ஜூன் மாதத்துக்கான இறுதித் தவணைக்குரிய கொடுப்பனவினை இவர்களுக்கு வழங்க முற்பட்டபோது அதை ஆட்சேபித்துத் தமக்கு முழுக் கொடுப்பனவையும் வழங்கக்கோரிய அகதிகள் அதனை ஏற்க மறுத்து விட்டனர்.

பின்னர் செயலக அதிகாரிகளைச் சூழ்ந்து கொண்டு அவர்களை வெளியேறவிடாது தடுத்த அகதிகள் தமக்குத் தகுந்த பதில் கிடைக்கும்வரை அதிகாரிகளை வெளியே செல்ல விடப்போவதில்லை எனக் கூறிஅவர்களைச் சுற்றிவளைத்து அமர்ந்து கொண்டனர்.

இதனை அடுத்து அந்த முகாமில் கடமையாற்றிவரும் பொலீஸார் இதில் தலையிட்டு அதிகாரிகளை விடுவிக்க முயன்றபோது அகதிகள் விடவில்லை. இதனையடுத்து இச் சம்பவம் தொடர்பாக வவுனியாவுக்கு அறிவிக்கப்பட்டதையடுத்துப் பொலீஸ் அதிரடிப் படையினர் அந்த இடத்துக்கு வந்து அதிகாரிகளை விடுவிக்க முயன்றபோது அகதிகள் அவர்களையும் தடுத்ததாகக் கூறப்படுகின்றது.

எனினும் பொலீஸ் அதிரடிப் படையினர் அகதிகளைப் பலவந்தமாக அப்புறப்படுத்தி விட்டு உள்ளே சென்று அதிகாரிகளைப் பாதுகாப்பாக வெளியேற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் அகதிகள் தரப்பில் காயமடைந்த ஒருவர் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-5-164)

### ரூ.160கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக் கடற்படை கொள்வனவு செய்யவிருக்கும் இந்தக் கடலோர ரோந்துக்கலம் **(Off Shore Petrol vessal)** ஒரு யுத்தக் கப்பல் அல்ல என்றும் -

அது துருப்புக்களை காவிச்செல்லவும், வழங்கல் - விநியோக நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தக் கூடியது என்றும் -

இலங்கைக் கடற்படையினரின் பாவனைக்குத் தேவையான சாதனங்களை அதில் பொருத்தும் வேலைகள் நடைபெற்று வருவதாகவும் -

இந்தியக்கடற்படைத் தலைமையக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு யுத்த உபகரணங்களை விற்கக்கூடாது என்ற பலமான கோரிக்கை இந்திய அரசியலில் நிலவுகின்ற போது இவ்வாறு யுத்த உபகரணங்கள், தளபாடங்களை இலங்கைக்கு விற்கலாமா என்ற கேள்விக்கு பதிலளிக்க இந்தியப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

"அரசின் நிதித்துறையின் வருவாய்களை அதிகரிப்பதுடன் பாதுகாப்பு அமைச்சின் நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் இந்நடவடிக்கைகள் உதவும்" என அவர்கள் கூறுகின்றனர்.

"இப்பிராந்தியத்தில் இந்தியக் கடற்படையை வலுமிக்க ஒன்றாக மாற்றுவதில் கடற்படை அதிகாரிகள் கவனமாக இருக்கின்றனர். இலங்கையின் பாதகமான நிலைமைக்குள் புகுந்து எமது நன்மைகளைத் தேட நாம் முயற்சிக்கவில்லை. பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யாவிடமிருந்து கப்பல்களையும் விமானங்களையும் நாம் கொள்வனவு செய்யும் போது இப்படியேதான். இது ஒரு சாதாரண பாதுகாப்புக் கொடுக்கல் வாங்கலே" எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

தமக்கே ரோந்துப்படகுகள் போதாத நிலையுண்டு என்ற குறையும் இந்தியக்கடற்படையின் சில பகுதியினரிடம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

# தேர்தல் வியூகம் வகுப்பதில் அரசியற் கட்சிகள் மும்முரம்

கொழும்பு,ஓக.13

பொதுத்தேர்தலுக்கான வியூகங்களை வகுப்பதில் அரசியல் கட்சிகள் மும்முரமாக ஈடுபட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி கடந்த வாரம் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பாக கேட்டறிந்துள்ளார். அதனை அடுத்து அவர் அமைச்சர்களுடன் தொடர்ச்சியான மந்திராலோசனையில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தனித்து போட்டியிடுவது என்ற நிலையில் இருந்து முஸ்லீம் காங்கிரஸ் இன்னமும் விடுபடவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் முஸ்லீம் காங்கிரஸின் விசேட செயற்குழு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொழும்பில் கூடவுள்ளது. இச்செயற்குழுவில் 375 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். செயற்குழு கூடி தேர்தலை எந்த வகையில் எதிர்கொள்வது என்பதை தீர்மானிக்கவுள்ளதாக முஸ்லீம் காங்கிரஸ் பிரதி நிர்வாக செயலர் ஏ.எம்.ஏ. அஸீஸ் தெரிவித்தார். பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடும் நிலை உருவாகுமானால் அது நிபந்தனையுடன் கூடியதாகவே அமையும் என்று முஸ்லீம் காங்கிரஸ் வட்டாரம் தெரிவித்தது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் இம்முறை தனித்தே போட்டியிட உள்ளதாக அறியவருகிறது. கண்டி, நுவரேலியா, பதுளை, இரத்தினபுரி,கொழும்பு மாவட்டங்களில் திட்டமிட்டபடி போட்டியிடுவதோடு இதற்கு புறம்பாக இந்திய வம்சாவழி மக்கள் கணிசமான அளவில் வாழும் வன்னி மாவட்டத்திலும் இ.தொ.கா. வேட்பாளர்களை நிறுத்த திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.இ.தொ.கா. பொதுத்தேர்தலில் சேவல் சின்னத்திலேயே வேட்பாளர்களை நிறுத்தவுள்ளது. வேட்பாளர் தெரிவு உட்பட தேர்தல் தொடர்பாக முடிவு எடுப்பதற்காக இம்மாதம் 27 ஆம் திகதி இ.தொ.காவின் அரசியல் குழு கூடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை -

இத்தேர்தலில் இ.தொ.காவின் அதிருப்தியாளர் குழுவில் உள்ள ஐந்து பேருக்கும் இ.தொ.காவில் போட்டியிட சந்தர்ப்பம் அளிக்கப்படும் சாத்தியம் கிடையாது என அறிய வருகிறது. அப்படி அவர்கள் இ.தொ.காவில் இருந்து வெளியேறும் நிலை ஏற்படுமானால் மலையகத்தில் இவர்கள் ஐ.தே.க.சார்பில் நிறுத்தப்படலாம் எனத்தெரிய வருகிறது. ஐ.தே.க., பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் அரசியற் கட்சிகள் அனைத்தும் அடுத்த வாரத்தில் கூடி சில முக்கிய முடிவுகளை எடுக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6-7)

## மட்டக்களப்பில்

# தொண்டர் ஆசிரியர்கள் உண்ணாவிரதமிருப்பர்!

மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகளில் பணியாற்றும் தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் எனக் கோரி எதிர்வரும் புதன்கிழமை முதல் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பான மகஜர் ஒன்றை அவர்கள் நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, கல்வி அமைச்சர் மற்றும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

கடந்த 12 வருடங்களுக்கு மேலாகத் தாம் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றி வருவதாக அவர்கள் தமது மகஜரில் தெரிவித்துள்ளனர். (ஐ-7-21)

### கலைப்பீட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் நடத்திய குழுவினருக்கும் இடையே நேற்றுமுன்தினம் மாலை ஏற்பட்ட வாய்த்தர்க்கம் தாக்குதலில் முடிவடைந்ததும் - தெரிந்தவையே.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து நேற்றுக்காலை 7 மணிக்கு ஒன்றுகூடிய ராகிங் சார்பு - விஞ்ஞானபீட மாணவர்கள் ராகிங்கை எதிர்த்த மாணவர்களைத் தாக்குவதற்காக கம்பிகள், பொல்லுகளுடன் கோபாவேசத்துடன் சம்பந்தப்பட்ட மாணவர்களைத் தேடி அலைந்தனர்.

'மருத்துவபீட மாணவன் ஒருவன் தங்கியிருந்த விடுதியை' முற்றுகையிட்ட அறுபதுக்கும் மேற்பட்ட மாணவர்கள், மேற்படி மாணவனைத் தாக்குவதற்கு முயன்றபோது அந்த மாணவன் அங்கிருந்து தப்பித்தலைமறைவாகிவிட்டதாகக் கூறப்படுகின்றது.

மாணவர்களின் அட்டகாசத்தைப் பொறுக்க முடியாத ஊர்மக்கள் ஒன்று சேர்ந்து மாணவர்களிடம் நியாயம் கேட்க முற்பட்டதைத் தொடர்ந்து அந்த மாணவர் குழு அங்கிருந்து வாபஸ் பெற்று பின்வாங்கிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் இந்த மாணவரின் விடுதிக்குச் சென்ற இவர்கள் குறிப்பிட்ட மாணவன் அங்கில்லாததைத் தொடர்ந்து கலைப்பீட மாணவன் ஒருவனின் விடுதிக்குச் சென்று நித்திரையிலிருந்த அவரைச் சுற்றி வளைத்துத் தாக்கிவிட்டு தப்பியோடினர்.

கூரிய முனையுடைய ஆயுதத்தினால் மாணவனின் தலையில் குத்தப்பட்டதை அடுத்து மாணவன் மயக்கமடைந்தான். தற்பொழுது அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவங்களினால் யாழ்.பல்கலைக்கழக சுற்றாடலில் நேற்று முழுவதும் பெரும் பதற்ற நிலை நிலவியது.

'ராகிங்' கொடூரத்தினால் சிறு சிறு சம்பவங்களாக எழுந்த பிரச்சினை, தற்பொழுது பீட ரீதியாக மோதலை உருவாக்கும் சூழ்நிலை எழுந்ததை அடுத்து -

இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்குடன் பல்கலைக்கழகத்திலுள்ள சகல பீட முற்போக்கு மாணவர்களும் மாணவர் மன்றப் பிரதிநிதிகளும் நேற்று மாலை கூட்டம் ஒன்றுக்கு ஒழுங்கு செய்திருந்தனர்.

அக்கூட்டத்தில் சமரச நிலை எட்டப்பட்டதாகவும் -

தாக்குதலில் ஈடுபட்டுத் தவறிழைத்தோர் மன்னிப்புக் கோருவதெனத் தீர்மானிக்கப்பட்டதாகவும் - தெரியவந்தது. (உ-5)

### மகா சங்கத்தினரின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பௌத்த பீடாதிபதிகள் பல்வேறு குறைபாடுகளைத் தெரிவித்துள்ளனர். இந்தக் குறைபாடுகளை அவர்களுடன் பேச்சு நடத்துவதன் மூலமே தீர்க்கலாம் என நான் நம்புகின்றேன்.

"அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு எந்தவிதமான தீங்கும் இழைக்கப்படவில்லை. அவ்வாறு ஒருபோதும் இழைக்கப்படவும்மாட்டாது" - இவ்வாறு பிரதமர் மேலும் தெரிவித்தார்.

பிரதமருடன் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதார விவகார, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் றொனி டி மெல் மற்றும் பிரதி அமைச்சர்கள் சிலரும் கண்டிக்குச் சென்றிருந்தனர்.

பௌத்த மகா சங்கத்தினர் உத்தேச அரசமைப்புத் திருத்தத்துக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தீவிர பௌத்த கொள்கையைப் பின்பற்றுபவர் எனக் கருதப்படும் ரத்னசிறி விக்கிரமநாயக்கா பிரதமராக நியமிக்கப்பட்டதை மகா சங்கத்தினர் வரவேற்றிருப்பதாகவும் கூறப்படுகின்றது. (உ-7)


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

முழு நிலா நாள் கருத்தரங்கு

இடம்:- யாழ். இந்துக் கல்லூரி
குமாரசுவாமி மண்டபம்

காலம்:- நாளை (14-08-2000) திங்கட்கிழமை
பிற்பகல் 3.30 மணி

தலைமை:- திரு. க.சி.குகதாசன்.
(முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

கருத்துரை:- 'புலம்பெயர்ந்த நாடுகளில்
நமது இளைய தலைமுறை'

வழங்குபவர்:- ஆறு. திருமுருகன் பி.ஏ.
(ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

அனைவரும் வருக!

பழைய மாணவர் சங்கம்.
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

ஆதரவு:-
விமலா களஞ்சியம்
275, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(C/12490)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13-08-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.